பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 23, சனிக்கிழமை 06.05.2017 | கதிர் 181

## பஸிலுக்கு அழைப்பாணை!

கடந்த ஜனாதிபதித் தேர்த லின் போது 'திவிநெகும' அபி விருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 300 கோடி ரூபாவைத் தவறாகப் பயன் படுத்தியமை தொடர்பாக முன் னாள்பொருளாதாரஅபிவிருத்தி அமைச்சர்பஸில்ராஜபக்ஷஉட் படநால்வருக்குகொழும்புமேல் நீதிமன்றம் நேற்று அழைப் பாணை விடுத்திருக்கின்றது.

# மயிலிட்டித்துறை விரைவில் விடுவிப்பு?

## முன்னேற்பாடாக படை நகர்வாம்

எஸ். நிதர்ஷன்

**வலிகாமம் வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மயிலிட்டித்துறை முகத்தையும் அதை அண்டிய பகுதிகளையும் மக்களிடம் விடுவிப்பதற்கு இராணுவத் தரப்புத் தயாராகி வருவதாகச் சில செய்திகள் கசிந்துள்ளன.**

**அதற்கு முன்னேற்பாடாக அப்பகுதியில் உள்ள படை முகாம்கள், நிலைகள் அகற்றப்படு கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

மயிலிட்டித் துறை வடக்குப் பிரதேசத்தில் ஏற்கனவே ஒரு சொற்பப் பகுதி விடுவிக்கப்பட் டுள்ளது.

தொடர்ந்து மயிலிட்டித்துறை முகத்தை கட்டுவன் – மயிலிட்டி வீதியை ஊடறுத்து ஒரு பிரதே சத்துடன் விடுவிப்பதற்கு படைத்

பக்கம் 18 »

## மஹிந்தவுக்கு உயிராபத்து நேர்ந்தால் மைத்திரியே பொறுப்பேற்க வேண்டும்

### இப்படிக் கூறுகிறது கூட்டு எதிரணி



கொழும்பு, மே 06

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயி ருக்கு ஆபத்து ஏற்பட்டால், அதற் கான பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவே

பக்கம் 18 »



## அனலைதீவு பாடசாலைகளின் குழப்பம் நேற்று சுமுகமாகத் தீர்க்கப்பட்டது!

### அதிகாரிகளுடன் கஜதீபன் நேரில் சென்று சமரசம்

அனலைதீவு, மே 06

கல்வி அதிகாரிகளும், வடக்கு மாகாண சபை உறுப் பினர் பா.கஜதீபனும் நேற்று அனலைதீவுக்குநேரில்சென்று அங்குள்ள மூன்று பாடசா லைகளில் பாதிக் கப்பட்டிருந்த கற்றல் – கற்பித்தல் நடவடிக் கைகளை வழமை நிலைக்குக் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து, நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அங்கு கற்றல் – கற்பித்தல் நட வடிக்கைகள் வழமைக்குத் திரும்பும் என்று நம்பப்படு கின்றது.

அங்குள்ள பாடசாலை ஒன்

பக்கம் 18 »

## வெசாக் தினத்தில் கறுப்புக் கொடியா?

### சீறுகிறார் மங்கள சமரவீர



வெசாக் பௌர்ணமி தினத்தில் கறுப்பு கொடிகளை ஏற்ற வங்குரோத்து அரசியல்வாதி களுக்கு இடமளிக்கப் போவதில்லை என வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வெசாக் தின நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்காக இந்தியப்

பக்கம் 03 »

## மட்டு., அம்பாறை பொலிஸ் நிலையங்களை தாக்குவதற்கு உத்தரவிட்டவர் கருணாதான்

### நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, மே 06

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் மட்டக்களப்பு, அம் பாறை ஆகிய மாவட்டங்களி லுள்ள பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் களுக்கு புலிகளின் கிழக்கு மாகாணமுன்னாள்தளபதியாக இருந்த கருணா அம்மானே கட்டளை பிறப்பித்துள்ளார் என்று சட்டம், ஒழுங்கு அமைச் சர் சாகல ரத்நாயக்க தெரிவித் தார்.

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு அடிபணியுமாறு

பக்கம் 18 »

## வடலியடைப்பில் நேற்று விபத்து தமிழ் சப் இன்ஸ்பெக்டர் பலி!




சித்தங்கேணி, மே 06

மதுபோதையில் வந்தவர் கள் எனக் கூறப்படும் இளை ஞர்கள்பொலிஸாரின்மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக் குள்ளாகினர். அதில் தமிழரான சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் பலி யானார். மேலும் மூவர் படுகாய மடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் வடலி யடைப்பு அரசடியில் இடம்பெற் றது.

இச்சம்பவத்தில் சாவகச்சேரி

பக்கம் 18 »

## பிரதமர் மோடி – சம்பந்தன் சந்திப்பு எங்கு என்பது இன்னும் முடிவில்லை

கொழும்பு, மே 06

எதிர்வரும் வியாழனன்று (11ஆம் திகதி) பிற்பகலில் கொழும்பு வரும் இந்தியப் பிரத மர்நரேந்திரமோடிஅடுத்தநாள் மாலையிலேயே இந்தியா திரும்பவிருக்கின்றார்.

இந்நிலையில் தமிழ்க் கூட் டமைப்பின்பிரதிநிதிகளைஅவர்

பக்கம் 03 »

## மேஜர் ஜெனரல் கமால் மீது கொலைக் குற்றச்சாட்டுக்கள்

பிரேஸிலில் உள்ள இலங் கைத் தூதரகத்தில் துணைத் தூதுவராகப்பணியாற்றஅனுப் பட்ட முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் கமால் குண ரட்னவால் பிரேஸில் தூத ரகத்தில் பணியாற்றிய நிமால் ரூபசிங்க என்பவர் கொலை செய்யப்பட்டார் என்ற குற்றம்

பக்கம் 18 »

## வித்தியா கொலை: குற்றப்பத்திரிகை அடுத்த வாரத்தில்!

புங்குடுதீவு மாணவி சிவ லோகநாதன் வித்தியா கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தப்பட்டு படுகொலை செய் யப்பட்ட வழக்கில் சந்தேக நபர் களுக்கு எதிராக குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்யப்படவுள் ளது.

குற்றப்பத்திரிகைஎதிர்வரும்

பக்கம் 18 »

## காலையில் அரச ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம் மாலையில் தனியார் வைத்தியசாலையில் வேலை

### அரச மருத்துவர் சங்க முக்கியஸ்தர் குறித்து நாடாளுமன்றத்தில் சர்ச்சை

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர்நேற்றுநாடளாவிய ரீதியில்வேலைநிறுத்தப்போராட் டத்தில் ஈடுபட்ட நிலையில், அந் தச் சங்கத்தின் தலைவர் தனி யார் வைத்தியசாலையொன் றில் சிகிச்சையளிப்பதற்காக முற்பணம் பெற்ற விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று ஆளும், எதிரணி உறுப் பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் கரு ஜய சூரிய தலைமையில் கூடியது. ஆரம்பக் கட்ட சபை நடவடிக் கைகள் முடிவடைந்த பின்னர் அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பினார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் இன்று (நேற்று) வேலைநிறுத்தப்போராட்டத்தில்

பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்



காசுக்கு வைத்தியம் செய்யலாம்... காசு கொடுத்து வைத்தியராவதற்குப் படிக்கக் கூடாது.... இதுதான் அவை யின்றை கொள்கை(கு/ள)...



# இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் அமெரிக்க பிரதிநிதிகள் சபை உறுப்பினர்

## மனித உரிமை, நல்லிணக்கம் தொடர்பில் அழுத்தம் கொடுக்கலாம் என எதிர்பார்ப்பு

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் பில் ஜோன்சன் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

வொஷிங்டனில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் பில் ஜோன்சனுக்கும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசத்துக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னர் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

எனினும், அவர் எப்பொழுது இலங்கைக்கு விஜயம் செய்வார் என்னும் விடயம் குறிப்பிடப்படவில்லை. இதேவேளை, இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கடுமையான முறையில் கவனம் செலுத்திவருகிறது.

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் இன்னமும் மேலோங்க வேண்டும் என்றும், அதற்கு அரசு கடுமையாக உழைக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு வலியுறுத்தி வருகின்றது.

இந்த விஜயத்தின் போது அவர் இலங்கையின் முன்னேற்றம், மற்றும் நல்லிணக்க முயற்சிகள் குறித்து ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் இவர் இலங்கைப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளமை, இலங்கை அரசியலில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பிலும், நல்லிணக்கம் தொடர்பிலும் இலங்கைக்கு அவர் அழுத்தங்களைக் கொடுக்கலாம் என்று மேற்கத்தேய ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி – முதலமைச்சர்கள் ஹபரணையில் இன்று சந்திப்பர்!

கொழும்பு, மே 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று முதலமைச்சர்கள் மாநாடு இடம் பெறவுள்ளது.

ஹபரண சினமன் லொட்ஜ் விடுதியில் இன்று காலை 9 மணிக்கு இந்த மாநாடு ஆரம்பமாகவுள்ளது. ஒன்பது மாகாணங்களினதும் முதலமைச்சர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபைகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை, ஹபரணை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சில அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். (ஐ)

# அயலவர்களுக்கு இடையூறு செய்த 15 இலங்கையர் குவைத்தில் கைது!

குவைத்தில் 15 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குவைத் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 15 இலங்கையர்களும், மது அருந்திவிட்டு அயல் வீட்டவர்களுக்கு இடையூறு விளைவித்துள்ளனர்.

அயலவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இந்த நிலையிலேயே அந்த இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் நாக்ரா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குவைத் நாட்டு சட்டத்தை மீறிச் செயற்பட்ட இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குவைத் நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ)

# ஆலய மஹோற்சவங்கள்

ஆனைக்கோட்டை, மே 06

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாவில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு கைலாச வாகனத்திருவிழா இடம்பெறும்.

நாளைமறுதினம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் புதன்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

* * *

கைதடி, மே 06

யாழ்ப்பாணம் கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (ச)

* * *

மூளாய், மே 06

யாழ்ப்பாணம் மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

* * *

மல்லாகம், மே 06

மல்லாகம் காளிகாதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

12 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ச)

* * *

புங்குடுதீவு, மே 06

புங்குடுதீவு மேற்கு, சிறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

27 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

# இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ள ஏனையோருக்கு எதிராகவும் வழக்கு!

## தெரிவிக்கிறார் பவித்ரா வன்னியாராச்சி எம்.பி.



கொழும்பு, மே 06

கீதா குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்கு அமைய, ஏனையோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:-

கீதா குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பைப் பயன்படுத்தி இரட்டைக் குடியுரிமையுடைய ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படும்.

கீதா குமாரசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் எதைச் சொல்லிக் கொள்ளும் நபர்களுக்கு அடிபணிந்திருந்தால் இன்று அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருக்கும்.

ஆளும் கட்சியின் அழுத்தங்களுக்கு அடிபணியாத காரணத்தால் கீதா தனது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிட்டுள்ளது.

அரசியலில் பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும், முன்னுரிமை வழங்கப்படும் என்று வாய்ச்சவடால் விடும் ஆளும் கட்சித் தலைவர்கள் நடைமுறையில் அதனைச் செயற்படுத்துகின்றார்கள் இல்லை.

தங்களுக்கு ஆதரவானவர்களை நாடாளுமன்றுக்குள் கொண்டு வரும் நோக்கில் இவ்வாறு கீதாவின் உறுப்புரிமை பறிக்கப்படுகின்றது.

இரட்டைக் குடியுரிமையுடன் நாடாளுமன்றில் அங்கம் வகிப்போர் பற்றிய விவரங்கள் உரிய நேரத்தில் உரிய முறையில் ஆதாரங்களுடன் நிரூபித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (ஐ)

# வாக்குறுதியால் ஏமாற்றப்பட்டமையே போராட்டத்தில் நாம் குதிக்கக் காரணம்!



இரணைதீவு மக்கள் கவலை தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 06

''இரணைதீவுக்கு இரண்டு வாரத்தில் செல்லலாம், இரண்டு மாதத்தில் செல்லலாம் அனுமதியை பெறுவதற்கான முயற்சியில் இருக்கின்றோம்'' என்று அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்குறுதிகளை வழங்கினார்கள். ஆனால், அந்த வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டுவிட்டோம். இதனாலேயே போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

நேற்று வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் எங்களின் சொந்த நிலத்துக்குச் செல்லும்வரை போராடப் போகிறோம். கடந்த காலம் போன்று அரசியல்வாதிகளை நம்பத் தயாரில்லை. எங்களிடம் வந்து 'இந்தா செய்கின்றோம் அந்தா செய்கின்றோம் இரண்டு வாரத்தில் சென்றுவிடலாம்' என்றெல்லாம் வாக்குறுதிகளை கூறிவிட்டு சென்றுவிடுவார்கள். நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். - என்றனர். (ஐ-70)

# மஹிந்த அரசில் குற்றவாளிகளுக்கு வெளிநாட்டுத் தூதரகங்களில் நியமனம்

## கோட்டாபய வழங்கினார் என்கிறார் மங்கள சமரவீர

கொழும்பு, மே 06

முன்னாள்பாதுகாப்புச்செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் குற்றவாளிகளைப் பாதுகாத்தார் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

குறிப்பாக, படுகொலைகள் மற்றும்கடத்தல்களுடன்தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அந்தத் தூதரகங்களில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அவர்களைப் பாதுகாக்கும் நோக்குடனேனே கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறான நியமனங்களை வழங்கினார் எனவும் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது அங்கு இடம்பெற்ற, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழான கட்டளையை அங்கீகரிக்கும் பிரேரணை



மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த ஆட்சியின்போது மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டதுடன் கடத்தல், கொள்ளைகளும் அதிகமாக இடம்பெற்றன எனச்சுட்டிக்காட்டிய மங்கள சமரவீர, இவற்றில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு கோட்டாபய பூரண பாதுகாப்பு வழங்கினார் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில்பாரியகுற்றங்களைச்செய்தகுற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் இல்லமாகவே வெளிநாட்டுத்தூதரகங்கள் அப்போது பயன் படுத்தப்பட்டன. பிரேஸிலில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்றுள்ள படுகொலையுடன் தொடர்புடைய இருவர் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அதேபோல், ஊடகவியலாளர் லசந்தவின் படுகொலையுடன் தொடர்புபட்ட ஒருவர் பேர்லினிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றினார் என்பதையும் வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர வெளிப்படுத்தியுள்ளார். (மு)

# மகிந்தவின் பாதுகாப்புக் குறைப்பு; நேற்று சபையில் வாதப் பிரதிவாதம்

## நடைமுறை ஒழுங்குகளை விளக்கினார் அமைச்சர் சாகல ரத்நாயக்க

கொழும்பு, மே 06

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை. அதனாலேயே அவருக்கு வழங்கப் பட்டிருந்த பொலிஸ் பாதுகாப் பிலிருந்து 42 பேர் விலக்கப் பட்டனர் என சட்டம், ஒழுங்கு அமைச்சர்சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அதி முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளானது அச்சுறுத்தல்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரமே மேற்கொள்ளப்படும். அந்த வகையில் தற்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு 26 விசேட அதிரடிப் படையினர் உட்பட 187 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மகிந்தவின்பாதுகாப்புகுறைக்கப்பட்டமைக்கு அவரது அணியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பாக விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்று சபையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே சட்டம், ஒழுங்கு அமைச்சர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

அவர் தனது விளக்கத்தில் மேலும் கூறுகையில் -

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைப் பொறுத்தவரை, ஜே.ஆர். ஜயவர்தன 1988 ஆம் ஆண்டு பதவியில் இருந்து ஓய்வுபெறும் போது அவரது பாதுகாப்புக்காக 65 உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டிருந்தனர். 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர் மரணிக்கும்போது அது 18 ஆக குறைந்திருந்தது.

டி.பி. விஜேதுங்க 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெறும் போது அவருக்கு 78 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். அவர் மரணிக்கும் போது அது 12 ஆகக்குறைந்திருந்தது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறும்போது அவரது பாதுகாப்புக்கு 198 இராணுவ மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டிருந்தனர்.

பின்னர் பாதுகாப்புக் குழுவொன்று ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய அவரது பாதுகாப்பு 12 இராணுவம் மற்றும் 69 பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதும் எனப் பரிந்துரை செய்யப்பட்டது. தற்போது அவருக்கு 59 பேர் பாதுகாப்பு பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். - என்றார் சாகல ரத்நாயக்க.

மேலும், கோரிக்கைகளுக்கு ஏற்ப அதிமுக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்படுகின்றது எனக் கூறிய அவர், ஜயம்பதி விக்கரமரட்ன எம்.பி. மற்றும் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. ஆகியோரின் பாதுகாப்புகள் அவ்வாறு அதிகரித்து வழங்கப்பட்டிருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

மஹிந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெறும்போது அவரது கோரிக்கைக்கு அமைய 102 இராணுவத்தினரும் 103 பொலிஸாரும் அவரது பாதுகாப்புக்கென வழங்கப்பட்டிருந்தனர்.

எனினும், அதிமுக்கிய பிரமுகர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு மட்டுமே வழங்குவது என்ற கொள்கைத் தீர்மானமொன்றை பின்னர் எமது அரசு எடுத்தது.

அதற்கமைய, மஹிந்தவின் பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்து 100 இராணுவத்தினர் திரும்ப பெறப்பட்டு அவர்களுக்குப் பதிலாக அமைச்சர்கள் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 100 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டனர். அதற்கு மேலதிகமாக 26 விசேட அதிரடிப்படையினரும் அவரது பாதுகாப்புக்கென வழங்கப்பட்டனர்.

தற்போது அதிலிருந்து 42 பொலிஸார் மீள அழைக்கப்பட்டுள்ளனர். அவருக்கு 26 விசேட அதிரடிப்படையினர் உட்பட 187 உத்தியோகத்தர்கள் தற்போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். - என்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்ற அதிமுக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பாக 6 மாதங்களுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேவைக்கேற்ப பாதுகாப்பை கூட்டுவதும் குறைப்பதும் பொலிஸ்மா அதிபரின் பொறுப்பாகும். - என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (மு)

# பொதுக் கூட்டம்

நீர்வேலி, மே 06

யாழ்ப்பாணம், நீர்வேலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஞ)

# வவு. பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவு

சைட்டத்திற்கு எதிரான போராட்டத்தால் வவுனியா பாடசாலைகளில் மாணவர்களின் வருகை நேற்று மிகவும் குறைவாக காணப்பட்டது.

பாடசாலைகள் இயங்கும் எனக் கல்வி அமைச்சர் ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும் சிலரது எதேச்சதிகார நடவடிக்கை காரணமாக மாணவர்களின் வரவு குறைந்தது என ஆசிரியர்கள் குற்றம் சுமத்தினர்.

குறிப்பாக, முச்சக்கர வண்டிச் சாரதிகள் பாடசாலைகள் இயங்காது எனக் கூறி மாணவர்களை வீடுகளுக்குக் கொண்டுசென்று சேர்த்தனர் என ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ம-100)

# தமிழ் மக்களின் போராட்டங்களை சிங்களத் தலைமைகள் மதிக்கவில்லை

## கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 06

தமிழ்மக்களால்முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அறவழிப் போராட்டங்களைத் தென்னிலங்கையில் உள்ள சிங்களத் தலைமைகள் மதிக்கவில்லை. இதனால், அரசுமீதானதமிழ்மக்களின் நம்பிக்கை கேள்விக்குறியாகி உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறிதரன் நேற்று சபையில் குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு-கேப்பாபிலவு, கிளிநொச்சி-இரணைதீவு ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள தமது காணிகளைவிடுவிக்கக்கோரி அப்பகுதி மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களைவிடுவிக்கக் கோரியும் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் போராட்டங்கள் தொடர்பாக பராமுகமாக இருக்கும் சிங்களத் தலைமைகள் மனிதாபிமானம் அற்றவர்களா?

இந்த நாட்டின் தேசிய இனமான தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் ஜனநாயகப் போராட்டங்கள் தொடர்பாக அரசு பராமுகமாக இருப்பது நாட்டின் இறைமையையே பாதிக்கும்.



பிளவுபடாத நாட்டில் சுயநிர்ணயத்துடனான சமஷ்டித் தீர்வொன்றை இந்த அரசு வழங்கும் என்றுநம்பியுள்ளமக்களுக்கும் அது நடைபெறுமா என்பதில் கேள்விக்குறி தோன்றியுள்ளது.

தென்னிலங்கைத் தலைவர்கள் அன்றைய காலத்தில் தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அறவழிப் போராட்டங்களையும் இவ்வாறோ கருத்தில் எடுக்கவில்லை.

அன்று தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் மீது தாக்குதல்களை நடத்தினார்கள். அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது அவரை ஏளனம்செய்தனர். அதனாலேயே ஆயுதப் போராட்டம் ஏற்பட்டது. - எனவும் சிறிதரன் எம்.பி கூறினார். (மு)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்கு, என்ன நேரத்துக்கு சந்திப்பார் என்பது குறித்து இன்னும் திட்டவட்டமான முடிவுகள் எடுக்கப்படவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வியாழனன்று மாலையில் கொழும்பில் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை இந்தியப் பிரதமர் சந்திப்பார் என்றே முன்னர் கூறப்பட்டது. ஆனால் அது விடயம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை எனத் தெரிகின்றது.

வியாழன் மாலையில் வரும் இந்தியப் பிரதமர் அடுத்த நாள் டிக்கோயா, கண்டி ஆகிய இடங்களுக்கும் செல்கின்றார்.

கொழும்பில் அல்லது டிக்கோயாவில் அல்லது கண்டியில் வைத்து கூட்டமைப்புத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை இந்தியப் பிரதமர் சந்திப்பார் என்று நேற்றுக் கூறப்பட்டது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் இரா.சம்பந்தன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் என்றும் அறிய வந்தது. (உ)

## வெசாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருகின்றார். அச்சமயத்தில் அவருக்கு எதிர்ப்புக் காட்டுவதற்காக வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்ற வேண்டும் என கூட்டு எதிரணியின் விமல் வீரவன்ஸ எம்.பி. பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார். அதற்குப் பதிலடி தந்துள்ளார் அமைச்சர் மங்கள சமரவீர.

சர்வதேச வெசாக் தினமாக இந்த வெசாக்தினத்தை கொண்டாடகிடைத்த சந்தர்ப்பம் மிகவும் வணக்கத்திற்குரியது எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமரின் முயற்சியின் பலனாக சர்வதேச வெசாக் தினம் அறிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடந்த சர்வதேச வெசாக் விழாவுக்கு ஷிரந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் சென்றனர்.

இந்தக் குழுவினர் மூன்று தினங்களில் 250 லட்சம் ரூபாவைசெலவிட்டனர் எனவும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

A member of the IDOL family
UV Water Solution
water science technologies
Right solution for water issues
No 277, Kachcheri Nallur Road, Nallur, Jaffna, Srilanka
வீடுகள், அலுவலகங்கள் உணவகங்களுக்கான குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்
தரமானதும்! மலிவானதும்!
* GreenGrass Hotel - Jaffna * SOS Children Village - Jaffna
* Tilko City Hotel - Jaffna * சாவகச்சேரி இந்துக்கல்லூரி
* K.M.K. Sea food - முளாய்
இல. 277, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
தொ.பேசி: + 94775092737

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: அரசின் தான்தோன்றித்தனம்!

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு' பதிலாகக் கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்' உள்ளடக்கம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தியும், அதிர்ச்சியும், விசனமும் வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்தான் 'அரச பயங்கரவாதத்தின்' விளைநிலம் என்பது கடந்த கால வரலாறு.

கட்டுமட்டில்லாத அதிகாரங்களைப் படைத் தரப்புக்கும் பொலிஸாருக்கும் வழங்கும் இந்தச் சட்டத்தின் கீழ்தான் ஆட்சித் தரப்புகள் பெரும் 'அரச பயங்கரவாதத்தை' கட்டவிழ்த்து விட்டன என்பது சரித்திரம்.

மிகக் கொடூரமான - மிக மோசமான - நாகரிக உலகுக்கு ஒவ்வாத - அடிப்படை நீதிக்கு முரணான - பல சட்ட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே ஆட்சியாளர்களின் பல அடாவடித்தனங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் காரணமாக அமைந்தன என்பதை இன்றைய ஆட்சியாளர்களும் ஏற்றுக் கொள்வர்.

*"அத்தகைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம், நீதி, நியாயமான - அதேநேரம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, வலுப்படுத்த - வழிசெய்யும் - புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவோம்."* எனக் கூறி காரியங்களை ஆரம்பித்தது புதிய நல்லாட்சி அரசு. ஆனால், இப்போது இந்த உத்தேச புதிய சட்டம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வெளியாகும் தகவல்கள் திருப்தி தருவனவாக இல்லை.

ஏற்கனவே இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பிரதான தரப்பு தமிழர்கள்தாம். அந்தத் தரப்பு, சட்டியிலிருந்து அடுப்பில் வீழ்ந்த கதையாகக் கருதத்தக்க விதத்திலேயே புதிய சட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதாம்.

உத்தேச சட்ட வடிவத்தின் உத்தியோகபூர்வ நகல் வெளியாகவில்லை. ஆனால், ஊடகங்களில் கசியும் தகவல்கள், புதிய சட்டமும் பழைய - தற்போது இருக்கின்ற - சட்டத்தின் வேறு வடிவம்தான் என்கின்றன.

இது 'மோதகம்' என்றால் அது 'கொழுக்கட்டை'. அவ்வளவுதான். வேறு வேறுபாடு இல்லை. உள்ளீடும் ஒன்றுதான்.

புதிய சட்டத்தின் மூல வரைவு தயாரான போது அதில் உள்ள பிரதான - மோசமான - தவறுகளை நாடாளுமன்றத்தின் 'தேசிய பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு'வில் தமிழர் தரப்பு சுட்டிக் காட்டியிருந்தது. இருபது எம்.பிக்களைக் கொண்ட இந்தக் குழுவில் எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், எஸ்.வியாழேந்திரன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் எம்.ஏ.சுமந்திரன் முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

- தற்போதைய சட்டத்தில் விசாரணையின்றி ஒரு சந்தேக நபரை 18 மாத காலம் தடுத்து வைக்க முடியும். தமிழர் தரப்பின் வலியுறுத்தல்படி புதிய சட்டத்தில் அது 2 மாதங்களாகக் குறைக்கப்பட்டது. இப்போதும் அந்த இணக்க நிலையே நீடிப்பதாகக் கூறப்படுகின்றது.
- கைது செய்யப்படுவோரை தற்போதைய சட்டத்தின் கீழ் சட்டத்தரணிகள் உடன் அணுகுவதற்கு இடமில்லை. புதிய சட்டத்தில் அதற்கு இடமளிக்க நாடாளுமன்ற துறைசார் குழுக் கூட்டத்தில் இணங்கிவிட்டு, இப்போது அதில் புதிய மட்டுப்படுத்தல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.
- சந்தேக நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிரான சாட்சியமாகப் பாவிக்கும் தற்போதைய முறைமையை நீக்க இணங்கிவிட்டு, மீண்டும் அதை வேறு ஏற்பாடுகளுடன் புதிய சட்டத்தில் புகுத்தியிருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் ஒப்புதல் வாக்குமூலம் பெறும் உயர் நடைமுறைகளைக் காட்டி, அதன் பெயரில் இந்த ஏற்பாட்டுக்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியின் இணக்கமும் கூடப் பெறப்பட்டிருப்பதாகவும் தகவல் உள்ளது.

- அடுத்த விடயம் 'பயங்கரவாதம்' என்ற சொல் தொடர்பில் புதிய சட்டமூலத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வியாக்கியானம், நியாயமான மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் மடக்கும் விதத்தில் குழப்பமானவையாகவும் அது இருப்பதாகத் தமிழ்க் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

- இந்த விடயங்கள் குறித்து தீர்வு காணப்பட்டே புதிய சட்ட முன்னெடுப்பு மேற்கொள்ளப்படும் என உறுதியளித்த அரசுத் தரப்பு, திடுதிப்பென தன்பாட்டில், திருப்தியளிக்கக்கூடிய திருத்தங்கள் எதனையும் செய்யாமல், சட்டவரைவை அமைச்சரவை முன் சமர்ப்பித்து, அங்கீகரித்து, தனது காய்நகர்த்தலை ஆரம்பித்துவிட்டது.

நல்லாட்சி அரசுடன் இணங்கிப் பேசி, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வைக் காண முயலும் தமிழ்க் கூட்டமைப்புக்கு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வரும் விடயத்தில் தான்தோன்றித்தனமாகவும், தன்பாட்டிலும் அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைப் போக்கு உசிதமானதல்ல என்பது தெளிவு.

இத்தகைய செயற்போக்குள்ள அரசுடன் நம்பி இறங்கி எப்படி இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கூட்டமைப்பு வெற்றிகரமாகக் கொண்டு வரப் போகின்றது? காலம்தான் பதில் கூற வேண்டும்.

# உலக வங்கியின் நலத் திட்டப்பணிகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும்

## வேண்டுகோள் விடுக்கிறார் ஹக்கீம்



கொழும்பு, மே 06

உலக வங்கியின் மூலம் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மேலும் பல மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலக வங்கி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் குடிதண்ணீர் திட்டங்கள் தொடர்பாக அதன் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல், நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக வங்கியின் மூலம் பல பெரிய வேலைத் திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஏழு மாவட்டங்களைமையப் படுத்தி சமூக அடிப்படையில் செயற்படுகின்ற குடிதண்ணீர்த் திட்டங்களுக்கான மேலதிக முதலீடுகள், அதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குகின்ற முயற்சி மற்றும் நகரமயப்படுத்தப்பட்ட சில பிரதேசங்களின் குடிதண்ணீர்த் தேவைப்பாடு போன்ற பல விடயங்களில் உலக வங்கி திட்டத்தின் தலையீடு சிறப்பான நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை, மலசலகூட வசதிகள் இல்லாத மாவட்டங்களில் அவற்றை உலக வங்கி மூலம் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

2030 ஆம் ஆண்டு சகலருக்கும் மலசலகூடங்களைப் பெற்றுக்கொடுக்கும் சர்வதேச நியமம் இருந்தாலும் அதற்கு பத்து வருடங்களுக்கு முன்னரே நாங்கள் அந்த எல்லையைத் தாண்டி விடலாம் என்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் உலக வங்கியின் சிறப்பான செயற்றிட்டங்களால் இவற்றை எம்மால் சாதித்துக்கொள்ள முடியும் என்று நாம் நம்புகின்றோம். - என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்க வேண்டும்

## கட்சியின் முன்னாள் தவிசாளர் சேகுதாவூத் கோரிக்கை

கொழும்பு, மே 06

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திலும் பார்க்க, புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அபாய கரமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், இதுதொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. மேற்படி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின், அது முஸ்லிம்களையே அதிகமாகப் பாதிக்கும் என்பதால், அந்தச் சட்டமூலம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை, அந்தக்கட்சி உடனே வெளிப்படுத்த வேண்டும். - என்றார். (எ)



# சேதமடையும் நிலையிலான இந்திய படகுகளே விடுவிப்பு

## நாடாளுமன்றில் அமைச்சர் அமரவீர



கொழும்பு, மே 06

சட்ட விரோதமாக எல்லை தாண்டி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் கையகப்படுத்தப்பட்ட இந்தியப் படகுகளில் பல சேதமடையும் நிலையில் உள்ளமையால் அவற்றை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜயரத்ன நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு, இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டின் போது அவர்களுடைய படகுகளைக் கைப்பற்றும் செயற்பாடு வழமையான ஒன்றாகும்.

எனினும், இந்திய அரசின் கோரிக்கைக்கு அமைய, இந்தப் படகுகள் கடந்த அரசின் காலப் பகுதியிலும் விடுவிக்கப்பட்டன. இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரிப்பு காரணமாக இனி அவர்களுடைய படகுகளை விடுவிப்பதில்லை என்று அரசு தீர்மானித்தது.

இந்திய அரசு மற்றும் இந்திய மீனவர்கள் நீண்ட காலமாகப் படகுகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. - என்றார். (ஐ)

### நாளை

07.05.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: உத்தரம் மு.ப. 9.51 வரை
திதி: துவாதசி மு.இ. 11.31 வரை

சுபநேரம் : 8.55 - 10.25 வரை
இராகுகாலம் : 4.25 - 5.55 வரை

காலைக்கதிர்


# சட்டம் தொடர்பில் விவாதிக்க அனுமதி மறுத்தார் சபாநாயகர்!

## உரிமை மீறல் என்கிறார் தினேஸ்



கொழும்பு, மே 06

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி குறித்த விவாதத்துக்கு சந்தர்ப்பம் வழங்க முடியாது என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான ஒரு நாள் தொழிற் சங்கப் போராட்டம் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்ற விவாதம் ஒன்றைக் கோரியிருந்தனர்.

இந்த நிலையில், காலம்கடந்து கோரிக்கை விடுத்தமையால் அதற்குச் சந்தர்ப்பம் வழங்க முடியாது என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அவைஒத்திவைப்பு விவாத மொன்றைக் கூட்டு எதிர்க்கட்சியினர் கோரியிருந்தனர்.

அவைஒத்திவைப்பு விவாதம் ஒன்றைக் கோருவதானால், விவாதம் நடத்தப்படுவதற்கு முதல் நாள் 12 மணிக்கு முன்னதாகக் கோரப்பட வேண்டும் என்று சபாநாயகர் அறிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் தினேஸ் குணவர்தன காலம் கடந்தே இந்த கோரிக்கையை முன்வைத்திருந்தார் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விவாதம் வழங்கப்படாமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை மீறலாகும் என தினேஸ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ)

# கழிவு முகாமைக்கு நீண்ட காலத் தீர்வு!

## அமைச்சர் சம்பிக்கவின் யோசனைக்கு அங்கீகாரம்



கொழும்பு, மே 06

மேல் மாகாண வலயத்தில் நகர மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்கு நீண்டகாலத் தீர்வை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவின் யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சு ஆகிய பங்களிப்பு செய்ய வேண்டும்.

கொழும்பு மாநகர அபிவிருத்தி திட்டம், மற்றும் கொழும்பு துறைமுக நிதி நகரத்திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றால் 2030 ஆம் ஆண்டளவில் கழிவுப் பொருள்கள் சுமார் ஆயிரத்து 300 தொன்கள் மேலதிகமாகச் சேரும்.

நாளாந்தம் இவற்றை சேகரிக்க வேண்டி ஏற்படும். இதற்கமைவாக நகர மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்காக ஏழு பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

★மீதொட்டுமுல்ல குப்பை மேடு தொடர்பில் இராணுவத்தினரின் உதவியுடன்மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களை 5 மாதங்களினுள் பூர்த்தி செய்வதற்கும், அந்தப் பிரதேசத்தை நகர வனப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

★தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள கழிவகற்றும் வேலைத் திட்டங்களுக்கான அடிப்படை சூழலியல் மதிப்பீட்டு செயன்முறையைப் பின்பற்றி சூழலியல்அங்கீகாரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அதிகாரமளித்தல்.

★கழிவுகளை தரம் பிரித்து வெளியேற்றுவதற்கு பொதுமக்களை அறிவுறுத்தல் மற்றும் பிரித்தொதுக்கப்பட்ட கழிவுகளை உரிய இடங்களுக்கு அனுப்புதல்.

★50ஆயிரம் குடும்பங்களுக்குஅதிகமான தொகையினர் வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் அவர்களுடைய கழிவகற்றல் மற்றும் மீள் சுழற்சி மத்திய நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

★மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுமற்றும் இலங்கை டிரான்ஸ் போம்பர்ஸ் லிமிடெட் நிறுவனம்ஆகியவை இணைந்து கழிவுகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்தல்.

★ புத்தளம், அருவக்காருகழிவகற்றும்வேலைத் திட்டத்துக்காக இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டு தூதுவர்கள் மூலம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல்.

★ களனி, குப்பை பரிமாற்றும் மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான பூமிப் பகுதியை இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கிக் கொள்ளல் என்பனவாகும். (ஐ)

# அரச மருத்துவ உத்தியோகத்தர்களது வேலை நிறுத்தத்தை ஏற்க முடியாது

## ஐ.தே.கவின் தொழிற் சங்க அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, மே 06

அரசமருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கத்தின் உத்தேச வேலை நிறுத்தத்தை ஒரு போதும் அங்கீகரிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்க அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜாதிக சேவக சங்கமய என்ற அமைப்பின் ஊடக செயலாளரும், உப தலைவருமான சுனில் டி சில்வா நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் பணத்தில் மருத்துவ பட்டப்படிப்பை பூர்த்தி செய்தோர் மக்களைக் கஷ்டத்துக்கு தள்ளுவது தார்மீகமானதல்ல என்று இந்தச் சந்திப்பில் அரச சேவைகள் தொழிற்சங்கக் கூட்டு சம்மேளனத்தின் செயலாளர் லலித் இந்திக தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், பதுளைமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் கருத்து வெளியிடுகையில், உழைக்கும் வர்க்கத்தை சிரமத்துக்குள் தள்ளும் இது போன்ற நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

போக்குவரத்து, மின்வலு உற்பத்தி, நீர்வழங்கல், பெற்றோலியம் முதலான துறைகள் சார்ந்த தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்றார்கள். இந்தத் துறைகள் சார்ந்த தேவைகளைத் தடையின்றி நிறைவேற்றுவோம் என்று அவர்கள் இதன் போது உறுதியளித்தனர்.

# அதி நவீன தொழில் நுட்பங்களுடன் சொகுசு பஸ் வருகிறது இலங்கைக்கு!

## அதன் பெறுமதி 25 கோடி ரூபா!!



உலகில் காணப்படும் அதிக நவீன தொழில் நுட்பங்கள் அடங்கிய சொகுசு பஸ் இலங்கையில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

ஜேர்மனியில் தயாரிக்கப்படும் Volkner Mobil நவீன வசதிகளைக் கொண்ட பஸ்ஸே இலங்கையில் அறிமுகமாகவுள்ளது.

இந்தப் பஸ் நடமாடும் வீடொன்றுக்குச் சமமானது என்பது விசேட அம்சமாகும்.

அனைத்து விதமான வசதிகளையும் கொண்ட இந்த பஸ்ஸில் படுக்கை அறை, குளிக்கும் அறை, உணவு அறை மற்றும் வீட்டுபொருள்கள் அடங்கிய வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இங்கு சபாரிரக மோட்டார் வாகனம் ஒன்றை நிறுத்துவதற்கானநிறுத்துமிட வசதியும் காணப்படுகின்றது. 40 அடி நீளமானஇந்தபஸ் இலங்கை பெறுமதியில் 23 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா துறைக்கு சொந்தமான கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரால் இந்த பஸ்ஸை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ)

# நீதிக் குற்ற விசாரணைப் பிரிவு உயர் அதிகாரி மீது விசாரணை

## 15 நாளில் அறிக்கை ஜனாதிபதி, பிரதமரிடம்

நிதிக்குற்ற விசாரணைப் பிரிவிலுள்ள உயர் அதிகாரி ஒருவரின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பில் இரண்டு குழுக்களை அமைத்து விசாரணைகளை அரசு ஆரம்பித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஆகியோர் தலைமையிலேயே நேற்றுமுன்தினம் முதல் இரு கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டு அதுதொடர்பானவிசாரணை அறிக்கையை 15 நாள்களுக்குள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குக் கையளிக்க வேண்டும் எனப் பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# யாழ். புனித சாள்ஸ் ம.வி. ஆண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 140 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ஜே.கிரிஸ் ரடெல் தலைமையில் நடைபெறும்.

இந்தநிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜாவும் கலந்து கொள்வர். (ச)

# சாவகச்சேரி வணிகர் மன்ற அறிவிப்பு

சாவகச்சேரி, மே 06

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் சித்திரை பௌர்ணமி தினத்தன்று தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கும் வகையில் எதிர்வரும் 10 ஆம் திகதி வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைக்குமாறு மன்றச் செயலாளர் வை.சிவராசா அறிவித்துள்ளார். (ச)

# நிலாவெளியில் விபத்து: முதியவர் உயிரிழப்பு!

நிலாவெளி,மே 06

திருகோணமலை நிலாவெளி பகுதியில் சைக்கிள் ஒன்றுடன் லொறி மோதி விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார் என நிலாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலாவெளி 2 ஆம் வட்டாரம், பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த, கே.தம்பி ஐயா (வயது-74) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

லொறியின் சாரதியை நிலாவெளி பொலிஸார் கைது செய்து, விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# சைட்டத்துக்கு எதிராக கிழக்குப் பல்கலையில் நேற்று ஆர்ப்பாட்டம்!





வந்தாறுமூலை,மே 06

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக முன்றிலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

'சுதந்திரமான மருத்துவ நலனில் தலையிட வேண்டாம்', 'மக்களின் பணத்தை வீணடிக்காதே','சுதந்திர மருத்துவ கல்வியை விற்கிறார் ராஜித', 'இலவச கல்வியில் தலையிட வேண்டாம்' போன்ற சுலோகங்களை எழுதிய பதாகைகளை ஏந்திய வாறு, பிரதான வீதியோரம் நின்று கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்-

மருத்துவக் கல்வியை பணத்துக்காக விற்பனை செய்வது பணம் படைத்தவருக்கு செய்யும் சலுகையாகவே அமையும். கல்வியும் சுகாதாரமும் விற்கப்படும்போது அதன் தரம் குறைந்து விடும். மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை உடனடியாக மூடி விடவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கிறோம். -என்றனர். (ச)

## மண் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது!

சம்மாந்துறை,மே 06

சம்மாந்துறை நெய்னாகாடு பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக ஆற்று மண் அகழ்வில் ஈடுபட்ட நால்வரை சம்மாந்துறை பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்தனர்.

இதன்போது, இவர்கள் அகழ்வுக்குப் பயன்படுத்திய உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் ஆகியனவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச)

# பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து இளம்தாயும் சேயும் படுகாயம்!

கிண்ணியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றிலிருந்து, கால் தவறிக் கீழே விழுந்து, இளம் தாய் ஒருவரும் அவருடைய 4 வயதுடைய மகளும் படுகாயமடைந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் கிண்ணியா-பைசல் நகர்ப் பகுதியைச் சேர்ந்த எஸ்.பர்ஷானா (வயது- 24) மற்றும் பாத்திமா பர்வின் (வயது-4) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இந்த பஸ் தம்பலகாமம் கோவிலடிப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த போது, சிறுமி பஸ்ஸில் ஓடி விளையாடியுள்ளார். அவரைப் பிடிப்பதற்கு தாய் சென்ற வேளையிலேயே கால் தவறி, இருவரும் கீழே விழுந்தனர் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## ஆரையம்பதி விபத்து: மூவர் கைது!

காத்தான்குடி ஆரையம்பதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் பேரில் அவரின் நண்பர்கள் மூவரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொலிஸார் கைதுசெய்தனர்.

ஆரையம்பதி நோக்கி இரண்டு மோட்டார் சைக்கிள்களில் நான்கு இளைஞர்கள் சென்றுள்ளனர். இந் நிலையில், இவர்கள் மோட்டார்சைக்கிள்களை வேகமாகச் செலுத் தியமையால், இரண்டு மோட்டார்சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்திலே மேற்படி இளைஞன் உயிரிழந்தார். இதன்போது படுகாயமடைந்த மற்றைய மூவரும் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)



# சட்டவிரோத மரக்குற்றி வியாபாரம் பொலிஸாரால் நேற்று முற்றுகை!

குச்சவெளி,மே 06

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்குளம் - பேராறு வனப் பகுதியினுள் நீண்டநாள்களாக சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டு வந்த காட்டு மரக்குற்றி வியாபாரம் பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை முற்றுகையிடப்பட்டது.

இந்த வனப்பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையில் வெட்டி குற்றிகளாக்கப்பட்ட நிலையில் 32 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மேலும் நால்வர் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகள் கும்புறுபிட்டி வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு!

திருகோணமலை,மே 06

திருகோணமலை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நஷ்டஈடு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.புனிதகுமார் தெரிவித்தார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட விவசாயிகளுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் வறட்சியால், 36 ஆயிரத்து 804 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 17 ஆயிரத்து 827 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் முதற்கட்டமாக பசளை மானியத்தை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஒரு விவசாயிக்கு தலா 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில், இரண்டாம் கட்டமாக நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் சரியான தரவுகள் கிடைக்காமையால் தான், நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டது.-என்றார். (ச)

# கிழக்கில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி!

கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியைத் தேசிய முகாமைத்துவ திணைக்களம் வழங்கியுள்ளது.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பட்டதாரிகளின் நீண்டகாலப் போராட்டத்துக்கு வெற்றி கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் கிழக்கு மாகாண பாடசாலைகளிலுள்ள 4 ஆயிரத்து 784 வெற்றிடங்களுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். பட்டதாரிகளுக்கு முன்னுரிமையளித்து வெற்றிடங்களுக்குரிய அனைத்து ஆளணிகளையும் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எமக்கு வழங்கப்பட்டுள்ள ஆவணங்களின் பிரகாரம் விரைவில் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளமையால் நியமனங்கள் தொடர்பில் விரைவான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

வெயிலிலும், மழையிலும் போராட்டங்களை முன்னெடுத்து வரும் பட்டதாரிகளுக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முடிந்தமை எமக்கு மன நிம்மதியைத் தருகிறது. -என்றுள்ளது. (ச)

# வெளிநாட்டு உணவுப் பொருள்கள் தொடர்பில் முறையான ஆய்வை மேற்கொள்ள நடவடிக்கை!



‘கிராம சக்தி’ அங்குரார்ப்பண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, மே 06

வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் அனைத்து உணவுப் பொருள்கள் தொடர்பாகவும் ஒரு முறையான ஆய்வைச் செய்து நாட்டுக்கு ப் பொருத்தமானவற்றை மட்டும் கொண்டுவருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களை வறுமையிலிருந்து விடுவித்து, அவர்களை வசதி படைத்தவர்களாக மாற்றுவதற்காக கிராமசக்தி மக்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு நாட்டை வறுமையிலிருந்து விடுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய அம்சமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், இதன்மூலம் 2020 ஆம் ஆண்டாகும்போது 15 ஆயிரம் கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கைத்தொழில் மற்றும் தேசிய தொழில் முயற்சிகளை மேம்படுத்தவும் நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவிக்கவும் விரிவானதொரு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் தேவையை நிறைவேற்றும் வகையில் கிராமசக்தி மக்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் உள்ள அனைத்து கள உத்தியோகத்தர்களும் இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து கொள்ள வேண்டும். அடுத்த மாதம் முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து பிரதேச அரசியல் தலைமைகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைப் பலப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

வசதியில்லாதவர்களை வசதியுள்ளவர்களாக மாற்றுவதற்கு கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் மூலம் முடியும். அதனை வெற்றிபெறச் செய்யும் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு கட்சி, நிறம் ஆகிய பேதங்களின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுபீட்சமான பொருளாதார மனிதனைப் போன்று பொறுப்புக்களை நிறைவேற்றும் உரிமைகளை விளங்கிக்கொண்ட சமூக மனிதனை உருவாக்குவதும் கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் நோக்கமாகும்.

2020 ஆம் ஆண்டாகும் போது கிராமசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரஜைகளினால் நிர்வகிக்கப்படும் 5000 கிராமசேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன.

மேலும், இதன் கீழ் ஒரு கிராமத்தின் சனத்தொகைக்கேற்ப ரூபா 8000 படி கணக்கிடப்படும் தனிநபர் அரச முதலீடு கிராமிய அபிவிருத்தி நிதியமாக நான்கு வருடங்களுக்கு கிராமங்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், அபிவிருத்தித் தீர்மானங்கள் ஆகியவை பிரஜைகளால் மேற்கொள்ளப்படும்போது பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட அரச நிதி முதலீடு, பிரஜைகளின் தொழில்முயற்சியை அபிவிருத்தி செய்வதில் மூலதன வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், கிராமிய தொழில் முயற்சியை முன்னேற்றுவதற்குத் தனியார் துறையின் நேரடிப்பங்கேற்பு போன்றவையும் இதன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கிராம அலுவலர் மட்டத்தில் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைக் கட்டியெழுப்பவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் சங்கைக்குரிய அத்துரலியே ரத்னதேரர், அமைச்சர்களான சரத் அமுனுகம, எஸ்.பீ. திசாநாயக்க, சஜித் பிரேமதாச, தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, கிழக்கு ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், உலக வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய வெளிநாட்டுப்பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

## கொழும்புத் துறைமுகத்துக்கு வந்தது மற்றொரு பாகிஸ்தான் போர்க்கப்பல்!



கொழும்பு, மே 06

பாகிஸ்தான் கடற்படையின் பி.என்.எஸ். சுல்பிகார் என்ற போர்க்கப்பல் நல்லெண்ணப் பயணமாக நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தப் போர்க்கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

பி.எஸ்.எஸ் சுல்பிகார் போர்க்கப்பல் நாளை ஞாயிற்றுக் கிழமைவரை கொழும்பில் தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கடல்சார் கண்காணிப்புக் கப்பலான பி.எம்.எஸ்.எஸ். டாஸ்ட் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள நிலையில் நேற்று பி.எஸ். எஸ். சுல்பிகார் என்ற மற்றொரு பாகிஸ்தான் போர்க்கப்பல் கொழும்பு வந்துள்ளது.

இந்த இரண்டு பாகிஸ்தான் கப்பல்களின் கட்டளை அதிகாரிகளும் நேற்று இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

## வெப்பமான காலநிலை மேலும் அதிகரிக்காது!

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை மேலும் அதிகரிக்கும் என அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் நாள் களில் மழை அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.

அத்துடன், காற்று அதிகமாக வீசக்கூடும் சாத்தியங்கள் காணப்படுகின்றன என்றும், அதற்கமைய அதிக வெப்பமான காலநிலை குறைவடையும் எனவும் அத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

## படையினரை நினைவுகூர தேசிய போர்வீரர்கள் மாதம்!

### ஜனாதிபதி செயலகத்தில் பிரகடனம்

கொழும்பு, மே 06

பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டைப் பாதுகாத்த படையினரை நினைவுகூரல் மற்றும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக 2017 தேசிய போர் வீரர்கள் மாதம் நேற்றுமுன்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

போர்வீரர் மாதத்துடன் இணைந்ததாக கொடி விற்பனையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான முதலாவது கொடி நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்தியில்-

மூன்று தசாப்தங்களுக்கு கூடுதலான காலம் நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை முடிவுறுத்திய மனிதாபிமான நடவடிக்கையில் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த போர் வீரர்கள் மற்றும் தமது அவயவங்களை அர்ப்பணித்த போர் வீரர்களை நினைவுகூரல்,



அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்குடன் போர்வீரர் மாதம் வருடாந்தம் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

ரணவிரு சேவை அதிகார சபையின் தலைவி அனோமா பொன்சேகா அம்மையாரால் முதலாவது நினைவுக் கொடி ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு கொடி விற்பனையில் கிடைத்த வருமானம் மாகாண ஆளுநர்களால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இந்த ஆண்டுக்கான கொடிகள் ஜனாதிபதியால் மாகாண ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் பாதுகாப்பு பதவி நிலை பிரதானி, கடற்படைத் தளபதி உள்ளிட்ட பாதுகாப்பு படை பிரதானிகளும் கலந்து கொண்டனர்.

# ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு மே 31 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மே 06

இவ்வருடம் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரன தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர் வரும் 31 ஆம் திகதிக்குள் பரீட்சைகள் திணைக் களத்துக்கு வழங்கப்பட வேண்டும்என்று பரீட்சைகள்திணைக் களம் அறிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். தனியார் விண்ணப்பதாரிகள் பத்திரிகைகளில் வந்துள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் 12 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்கள் ஊடாக சாதாரண தரப்பரீட்சை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வடக்கு, கிழக்கு தொழிற்சாலைகளை மீளக் கட்டியெழுப்ப ஒத்துழையுங்கள்!

## இரு மாகாண கட்சிகள், எம்பிக்களிடம் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் வேண்டுகோள்



கொழும்பு, மே 06

வடக்கு கிழக்கில் அழிந்து போன தொழிற்சாலைகளை புனரமைப்புச் செய்து மீண்டும் வினைத்திறன் கொண்ட தொழிற்சாலைகளாக அவற்றை இயங்கச் செய்வதற்கான வேலைத் திட்டத்தை கைத்தொழில் வர்த்தக அமைச்சு ஆரம்பித்துள்ளது. எனவே இதற்கு வடக்குமாகாண சபை, கிழக்கு மாகாண சபை ஆகிய இரு மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றில் தெரி வித்தார்.

கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள், குழுமங்களின் மீளமைக்கப்பட்ட பதிவுக் கட்டணங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பத்திரத்தைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் ரவி கருணாநயக்கவின் பிரேரணையில் கூறப்பட்டதற்கிணங்க இந்தக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

வடக்குகிழக்கில்கைத்தொழிற்சாலைகளை வினைத் திறனாக்குவதன் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் பெரிய பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.- என்றார்.

# தினசரி ராசி பலன் 06.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங் கள் 23ஆம் நாள் ஏகாதசி திதி இரவு 8.30 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம்: பூரம் காலை 6.09 மணி வரை. பின்னர் அசுபயோகம். ராகு காலம் பகல் 9.00 மணி முதல் 10.33 மணி வரை. சுப நேரம் மாலை 2.53 மணி முதல் 4.23 மணி வரை. இன்று ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி. சித்திரமாத வளர்பிறை ஏகாதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு உத்தரம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். இது வரைபட்ட கஷ்டங்கள் பனிபோல் விலகும். புதுத்தெம்பும் உற்சாகமும் தோன்றும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**ரிஷபம்:** விருத்தியான நாள். வியாபாரத்தில் உழைப்புக்கு நல்ல பலன்கிடைக்கும். இழுபறியாய் இருந்த பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படும். எடுக்கும் முயற்சிகள் தாமதப்படும். நம்பிக்கை வைத்தவர்கள் ஒசைப்படாமல் ஒதுங்கிவிடும் சூழல் உருவாகும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்பத்தில் சந்தோஷம் கூடும். வியாபாரம் விருத்தி அடையும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டமான நாள். பணம் பலவழிகளாலும் வந்துசேரும். வியாபார விரிவாக்கத்திற்காக புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**கன்னி:** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றும். உடல்நலம் பாதிப்புறும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் கொழிக்கும். சிலருக்கு அசையாத சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் திருப்தியைத்தரும். வியாபார விரிவாக்கம் நல்ல விதமாக அமையும்.

**தனுசு:** விருத்தியான நாள். உத்தியோகத்தர்களின் திறமையால் உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களையும், பதவி உயர்வு சம்பள உயர்வையும் பெறுவார்கள்.

**மகரம்:** துயரமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் உண்டாகும். வியாபாரத்தொழில் மந்த நிலையை அடையும்.

**கும்பம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று.

**மீனம்:** மேன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். வியாபாரம் மேன்மை அடையும். உத்தியோகத்தர்கள் சிலருக்குக் கௌரவப் பதவிகள் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: உத்தராடம் 2, 3, 4 ஆம் கால்கள் திருவோணம். அவிட்டம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் ஆரம்பிப்பதை இன்று தவிர்க்கவும்.

# 20 மைக்ரோனுக்கு குறைந்த பொலித்தீன் பைகளை பாவிப்போர் மீது நடவடிக்கை!

## மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானம்

கொழும்பு, மே 06

தரம் குறைந்த 20 மைக்ரோனுக்கும் குறைவான பொலித்தீன் பைகளை உபயோகிக்கின்றவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

20 மைக்ரோனுக்கும் குறைவான பொலித்தீன்களுக்கு 2006 ஆம் ஆண்டு முதலே தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் இன்னும் சில உற்பத்தியாளர்கள் தடை செய்யப்பட்ட பொலித்தீன்களை உற்பத்தி செய்து வருகின்றனர் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இவ்வாறு தரம் குறைந்த பொலித்தீன்கள் தொடர்பில் சுற்றிவளைப்புத் தேடுதல்களை தீவிரப்படுத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வறட்சியால் மரக்கறி விலை அதிகரிக்கும் நிலை

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை மேலும் நீடித்தால் மரக்கறிகளின் விலை அதிகரிக்கக்கூடும் என்று ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய பிரசோதனை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

விவசாயத்துக்குப் போதுமான நீர் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கலே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என மத்திய நிலையத்தின் விற்பனைப் பிரிவின் பிரதானி துமிந்த பிரியதர்சன தெரிவித்துள்ளார்.

# போக்குவரத்து சட்டமீறல்களைக் கண்டறிய சிவில் உடையில் பொலிஸார் கடமையில்!

கொழும்பு, மே 06

வீதிச் சட்டங்களை மீறி பயணிக்கும் சாரதிகளைக் கைதுசெய்வதற்கு விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுவர் என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றும் பொலிஸ் திணைக்களமும் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்றுமுன்தினம் தொடக்கம் முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்த தனியார் நிறுவனம் மூலம் தரப்படும் 10 வாகனங்களில், சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் நடமாடும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வீதி ஒழுங்குகள், சட்டம் என்பவற்றை மீறும் சாரதிகளை நடமாடும் சேவையிலுள்ளவர்கள் கண்டால், கொழும்பு பொலிஸ் நிர்வாகப் பிரிவு, கடமையில் உள்ள போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதி காரிகளுக்குத் தகவல்களை வழங்குவர்.

இத்தகையவர்களுக்கு எதிராகப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும். கொழும்பு நகரில் ஆரம்பிக்கப்படும் இந்த நடவடிக்கை பின்னர் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும்.- என்றார்.

# அம்பாந்தோட்டை மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணப்பணிக்கு 386 கோடி ரூபா செலவு

## அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு

கொழும்பு, மே 06

அம்பாந்தோட்டைசர்வதேச மாநாட்டு மண்டப நிர்மாணப் பணிகளுக்காக 386 கோடி 4 லட்சம் ரூபா நிதி செல விடப்பட்டுள்ளதாக ஆளும் கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அதேநேரம் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து 20 கோடி அமெரிக்க டொலர்கள் கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் மீதித்தொகை திறைசேரி ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம், மாகம் றுஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபம் நிர்மாணிப்பதற்காகசெலவானபணத் தொகை, அந்த நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட மூலங்கள், இதுவரை ஈட்டிய வருமானம், நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கேள்விகளை எழுப்பினார்.

அவ்வினாக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், நகர அபிவிருத்தி அதிகார சபையின்கீழ் சர்வதேச மாநாட்டு மண்டபம் இயங்குகின்றது. இந்த மாநாட்டு மண்டபத்தின்ஊடாக 01.01. 2015தொடக்கம்31.12.2016ஆம் திகதி வரையரான காலப்பகுதியில் 8 கோடியே 35 லட்சம் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. அத்துடன், இந்த மண்டபத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகத் தொடர்ந்தும் பணம் செலவிடப் போவதில்லை. என்றார்.

ஆங்கிலத்தில் - Wade Shepard
வழிமூலம் - Forbes
மொழியாக்கம் - நித்தியபாரதி




# ஆசியாவில் கால் பதிக்க தவிக்கும் நாடுகள்...!

சீனா, ரஷ்யா, ஜப்பான், இந்தியா போன்ற பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் கிழக்கு ஐரோப்பிய ஆசியப் பிராந்தியந்தின் ஊடாகத் தமது அரசியல் மற்றும் பொருளாதார இருப்பிடத்தை நிலை நாட்டுவதற்கு போட்டியிடுகின்றன.

இவ்வாறான அதிகாரத்துவப் போட்டிக்குள் அகப்பட்டுத் தவிக்கும் சிறிய நாடுகளில் இத்தகைய அதிகாரத்துவ நாடுகள் முதலீடுகள், நிதி மற்றும் அபிவிருத்தி போன்ற உதவிகளை மேற்கொள்வதற்காகப் 'பல் திசை மூலோபாயத்தை' பிரயோகித்து வருகின்றன.

ரஷ்யா, சீனா, தென்னாசியா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ள கசகஸ்தான் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். சோவியத் யூனியன் உடைந்த போது கசகஸ்தான் பிரபலமாகப் பேசப்பட்டது. கசகஸ்தான், ரஷ்யாவின் கைப்பாவை நாடாக இருந்தது என்பதற்கும் அப்பால், தனது நாட்டில் அனைத்துலக அதிகாரத்துவ நாடுகள் பல பில்லியன்களை முதலீடு செய்ய வருமாறு கசகஸ்தான் அழைப்பு விடுத்தது.

சீனா தனது ஓர் அணை ஒரு பாதை திட்டத்தை அமுல்படுத்து வதற்காக பல அனைத்துலக நாடு களில் பல்வேறு முதலீடுகளை மேற் கொண்டு வருகிறது. குறிப்பாக ஆசியா, கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்கா போன்ற பிராந்தியங்களில் கட்டுமான அபிவிருத்தியை மேற்கொள்வதன் மூலம் சீனா பெரியதோர் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்துவ நாடாகத் துரித வளர்ச்சியடைந்துள்ளது.

புதிய பூகோள அரசியல் போட்டியாளராகத் திகழும் சீனா நீண்ட காலமாக அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டணிகளாகத் திகழும் நாடுகளை ஆட்டங் காணச் செய்துள்ளது. அத்துடன், அதிகாரத்துவமற்ற நாடுகளில் 'பல்- திசை மூலோ பாயங்களை' பிரயோகித்து சீனா தனது செல்வாக்கை நிலைநிறுத்தி வருகிறது.

சீனாவின் இத்தகைய செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வரலாற்று ரீதியாக நோக்கில், இலங்கை இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளுடனேயே தொடர்ச்சியாக நெருக்கமான உறவைப் பேணிவந்துள்ளது. ஆனால், இலங்கையில் பல பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட நீண்ட கால உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கையின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. உள்நாட்டு யுத்தத்தின் முடிவின் போது இலங்கை அரச தரப்பால் பல்வேறு போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையாலும் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா' போன்ற நாடுகளாலும் போர்க் குற்ற மீறல்களைக் காரணம் காட்டி பொருளாதாரத் தடை விதிக்கப் பட்டது.

அனைத்துலக சமூகத்தின் இந்த அழுத்தம் இலங்கையின் பூகோள அரசியல் பின்னணியில் எதிர்பாராத திருப்பத்தைக் கொண்டு வந்தது. தான் செய்த தவறுகளுக்காக இலங்கை அனைத்துலக சமூகத்திடம் சரணடைவதற்குப் பதிலாக சீனாவிடம் உதவிக் கரம் நீட்டியது. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவுவதில் சீனா அதிக விருப்பம் கொண்டிருந்தது.

இலங்கைக்கு இராணுவ உதவியாக 37 மில்லியன் டொலரும், கடனாக 8 பில்லியன் டொலரும் சீனாவால் வழங்கப்பட்டது. அத்துடன், 269 ஹெக்ரேயர் பரப்பில் 1.4 பில்லியன் டொலர் செலவில் கொழும்பு நிதி நகரமும், ஆழ்கடல் துறைமுகம், அனைத்துலக விமான நிலையம், துடுப்பாட்ட அரங்கம், மாநாட்டு மண்டபம், தொழிற்துறை வலயம் உள்ளடங்கிய அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல்வேறு பெரிய அபிவிருத்தித் திட்டங்களும் சீனாவால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை மீதான சீனாவின் இந்தச் செல்வாக்கு இந்தியாவுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது. சீனாவின் பூகோள பொருளாதார மற்றும் இராணுவ அதிகாரம் இந்திய மாக் கடல் பிராந்தியத்தில் திடீரென அதிகரித்தமை இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இந்தியா இலங்கைத்தீவு மீது செல்வாக்குச் செலுத்தத் தவறினால் இங்கு வேறு நாடுகள் தமது நிதி மற்றும் வேறு உதவிகளைக் காண்பித்து தமது செல்வாக்கை நிலைநிறுத்த முயலும் என்பதையே சீனாவின் நிலைப்பாடு காண்பிக்கின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்குப் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ள நிலையில் இலங்கைக்கு வடகிழக்கில் அமைந்துள்ள திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

திருகோணமலைத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் இந்தியா முன்னர் ஆர்வம் காண்பிக்கவில்லை. ஆனாலும், இலங்கை மீதான தனது செல்வாக்கை நழுவவிடக் கூடாது என்ற காரணத்துக்காகவே தற்போது இந்தியா திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி தொடர்பில் ஆர்வம் காண்பிப்பது போல் தோன்றுகின்றது.

அனைத்துலகக் கட்டுமான முதலீடு மற்றும் அபிவிருத்தி லாபத்துடன் மட்டும் தொடர்புபட்ட விடயமல்ல. ஒரு நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான ஒரு வழியாகவே இது பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் பூகோள அரசியல் சக்திகளுடன் போட்டியிடும் நிலைப்பாட்டை எதிர்த்து நிற்பதற்கான ஒரு வழியாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

தனது நாட்டில் கட்டுமானத்தை முன்னெடுக்க வேண்டிய தேவையிலுள்ள இந்தியா தற்போது இலங்கையில் 200 கோடி டொலரை முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளது. பிந்திய சோவியத் யுகத்தில், ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளின் கட்டுமானத் திட்டம் மற்றும் போக்குவரத்துத் திட்டங்களுக்காக ஜப்பானால் 20 ஆயிரம் பில்லியன் டொலர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சீனா தனது புதிய பட்டுப் பாதைத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல் படுத்துவதற்காக மிகத் துரிதமாக அனைத்துலக மயமாகி வரும் நிலையில் சீனாவின் இந்த வளர்ச்சியை முறியடிப்பதற்காக அனைத்துலக அதிகாரத்துவ நாடுகள் மூன்றாம் தரப்பு நாடுகளில் முதலீடு செய்ய வேண்டிய அழுத்தத்துக்கு உட்பட்டுள்ளன. ரஷ்யா, இந்தியா, ஜப்பான் போன்ற அதிகாரத்துவ நாடுகள் சீனாவின் இந்த நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளன.

அதாவது, மூன்றாந் தரப்பு நாட்டில் தாம் முதலீடு செய்யாவிட்டால் சீனா முதலீடு செய்யும் என்பதை இந்த நாடுகள் நன்கு அறிந்துள்ளன. அதிகாரத்துவ நாடுகளின் புதிய போட்டியில் கசகஸ்தான், சேர்பியா, பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகள் நலன் பெறுகின்றன. சீனா தனது பட்டு பாதைத் திட்டத்தின் பெரும் பகுதியை தமக்காகவே அமுல்படுத்துகிறது என்று இந்த நாடுகள் நோக்குகின்றன. ★

# கிளிநொச்சியில் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு ஆசிரியர் பங்கீடு இன்மையே காரணம்

**பெற்றோர்கள் தரப்பில் குற்றச்சாட்டு**

பூநகரி, மே 06

கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்திலுள்ள முட்கொம்பன் வித்தியாலயத்திற்கு அதிபர், ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது எனப் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் தொடக்கம் மேற்படி பாடசாலை அதிபர் அற்ற பாடசாலையாக இது இயங்குகின்றது. ஆசிரியர் ஒருவரே தற்போது பாடசாலையின் நிர்வாகப் பொறுப்புக்களைக் கவனித்து வருகின்றார். 600 வரையான மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிப்பதற்கு இது வரை ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேற்படி பாடசாலையில் கணித பாடத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். ஆனால் இதுவரை காலத்தில் ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை. அவ்வாறே விஞ்ஞானப் பாடத்திற்கும் இரண்டு ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். ஆனால் எவரும் நியமிக்கப்படவில்லை.

க.பொ.த உயர்தரத்தில் இந்து நாகரிகத்திற்கு ஆசிரியர் இல்லை. இதனால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆறு அதிபர்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர். அங்கு தரம் இரண்டு வகையைச் சேர்ந்த இரு அதிபர்களும், தரம் மூன்றில் மூன்று அதிபர்களும், தரம் ஒன்றில் ஒருவருமாக 6 அதிபர்கள் உள்ளனர்.

கிளி. மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் இரண்டில் இரு அதிபர்கள் கடமையாற்றுகின்றனர், பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் தரம் இரண்டு அதிபர் அதிபராகக் கடமையாற்ற தரம் ஒன்றைச் சேர்ந்த அதிபர் ஒருவரும் அங்கு கடமையில் இருக்கின்றார்.

இராமநாதபுரம் பாடசாலையில் தரம் இரண்டு நிலையைச் சேர்ந்த இரு அதிபர்கள் உள்ளனர், இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் தரம் இரண்டு அதிபர் ஒருவரும் தரம் மூன்று அதிபர் ஒருவரும் உள்ளனர்.

கிளிநொச்சி நகரை அண்டிய பாடசாலைகளில் இவ்வாறு அதிபர், ஆசிரியர்களின் வளம் மேலதிகமாக இருக்கும்போது கிராமப்புறப் பாடசாலைகளில் போதுமான ஆசிரியர் வளம் இன்றி மாணவர்கள் கல்வியில் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்கின்றனர்.

கிளிநொச்சிப் பாடசாலை ஒன்றில் அதிபராகக் கடமையாற்றிய ஒருவர் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர் வடக்கின் கல்வி அமைச்சராக இருக்கின்றார். இவர்கள் இணைந்து அதிபர், ஆசிரியர் வளங்களை முறையாகப் பங்கீடு செய்தால் இவ்வாறான நிலை ஏற்படாது எனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ம-70)

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 170

பொன்.வேணு கிருஷ்ணா

## அமெரிக்கத் துணை ஜனாதிபதி எச்சரிக்கிறார்

அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் ஆசியா ஊடான அவரது சுற்றுப்பயணத்தைத் தொடருகையில், வடகொரியாவுக்குப் பயமுறுத்தும் இராணுவ அச்சுறுத்தலை விடுத்துள்ளார். அமெரிக்கா எப்போதும் சமாதானத்தையே நாடுகிறது என அபத்தமாக கூறு கின்றபோதும், ட்ரம்பின் கீழ் கேடயம் பாதுகாப்பளிக்கிறது மற்றும் வாள் தயாராகவுள்ளது எனவும் அறிவித்தார்.

''ஒரு பெரும் மற்றும் செயலூக்க முடைய அமெரிக்க விடையிறுப்புடன், நாங்கள் எந்தவொரு தாக்குதலையும் தோற்கடிப்போம், மேலும் வழமையான ஆயுதங்களையோ அல்லது அணு ஆயுதங்களையோ கொண்ட எந்தவொரு பிரயோகத்தையும் எதிர்கொள்வோம்... அனைத்து வாய்ப்புகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இராணுவ வீரன் தேவையற்று வாளை தாங்கி நிற்கமாட்டான் என்பதற்கு வரலாறு சான்றளிக்கும்'' என்று பென்ஸ் எச்சரித்தார்.


அச்சுறுத்தலை அடிகோடிட்டுக்காட்டி, அமெரிக்க அணுஆயுத விமானந்தாங்கி கப்பலான USS ரொனால்ட் ரீகன் அதன் தாய் துறைமுகமான ஜப்பானின் யோகோசுவாவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது பற்றி பென்ஸ் பேசினார். அமெரிக்க கடற்படை கப்பலான கார்ல் வின்சனின் தலைமையில் கொரிய தீபகற்பத்தின் கடற்பகுதியை நோக்கி முன்னேறிச் சென்றுள்ள மற்றொரு விமானந்தாங்கிக் கப்பல் தாக்குதல் குழுவானது அடுத்த வாரத்திற்குள் அங்கு சென்றடையவுள்ளது. வெள்ளை மாளிகை மற்றும் பென்டகனின் முந்தைய தவறான அறிக்கைகள் தெரிவித்தபடி கடந்த வாரத்திலேயே அது அதன் வழியில் முன்னேறியிருந்தது.

மில்லியன் கணக்கிலான மக்களின் உயிரிழப்பு நிகழக்கூடும் என்பதை ஒப்புக்கொள்கின்றபோதிலும், வட கொரியா மீதான ஒரு முன்கூட்டிய அமெரிக்க தாக்குதலுக்கு வழி செய்யும் பொருட்டு பியோங்யாங்கிற்கு எதிரான பென்ஸின் புதுப்பிக்கப்பட்ட அச்சுறுத்தல்களை குடியரசு கட்சியின் செனட்டரான லிண்ட்சே கிரஹாம் தனது பகிரங்கமான ஆதரவின் முலமாக இன்னும் அதிகரிக்க செய்தார்.

**கொரிய தீபகற்பத்தின் மீதான ஒரு போரானது சீனா, ரஷ்யா போன்ற அணு ஆயுதமேந்திய சக்திகளை போருக்கு இட்டுச் செல்லும் வகையில் ஒட்டுமொத்த கிரகத்திற்கும் ஒரு பேரழிவை விளைவிக்கும்.**

NBC இன் Today நிகழ்ச்சியில் கிரஹாம் பேசுகையில்,'' இது பயங்கரமானதாக இருக்கும்... இது கொரிய தீபகற்பத்திற்கு படுமோசமான நிலையை உருவாக்கும். சீனாவுக்கும் மோசமானதாக இருக்கும். மேலும் ஜப்பானுக்கும், தென் கொரியாவிற்கும் கூட இது மோசமான நிலையை உருவாக்கும். இதுவே வடகொரியாவின் முடிவாகவும் இருக்கும். ஆனால் அது அமெரிக்காவை தாக்க முடியாது, அது அமெரிக்காவிற்கு வரக்கூடிய ஒரேயொரு வழி ஒரு ஏவுகணை ஊடாகவே'' என அறிவித்தார்.

ஒட்டுமொத்த அமெரிக்க அரசியல் மற்றும் இராணுவ ஸ்தாபகத்தை வியாபித்துள்ளதான மனித துயரங்களுக்கான பொறுப்பற்ற தன்மை மற்றும் கொடூரமான அலட்சியம் போன்ற இவற்றையே செனட் ஆயுத சேவை குழுவில் (Senate Armed Services Committee) அமர்ந்திருக்கும் கிரஹாமின் கருத்துக்கள் பிரதிபலித்தன. கொரிய தீபகற்பத்தின் மீதான ஒரு போரானது சீனா, ரஷ்யா போன்ற அணுஆயுதமேந்திய சக்திகளைப் போருக்கு இட்டுச்செல்லும் வகையில் ஒட்டுமொத்த கிரகத்திற்கும் ஒரு பேரழிவை விளைவிக்கும்.



வடகொரியா அதன் மட்டுப்படுத்தப்பட்ட அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை நிறுத்துவதற்கு வலியுறுத்திய முந்தைய நிர்வாகங்களின் தோல்வி பற்றி கிரஹாம் குறிப்பிடுகையில், ''இருபது ஆண்டுகளுக்கு முன்பு, உண்மையில் வடகொரியாவிடம் எந்தவொரு அணுஆயுதமும் இல்லை. ஒவ்வொரு குடியரசுவாதியும் மற்றும் ஒவ்வொரு ஜனநாயகவாதியும் வடகொரியாவைத் திருகிவிட்டுள்ளனர். அவர்களது தாயகத்தை (அமெரிக்காவை) தாக்க ஒரு ஏவுகணையை பெறுவதற்கு அவர்களே காரணமாக உள்ளனர். (அவர்களை) நிறுத்துவதற்கு இதுவே சரியான நேரம்.'' என கடுமையாகப் பேசினார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் இராணுவவாத தர்க்கத்தை கிரஹாம் வெறுமனே இன்னும் வெளிப்படையாக வலியுறுத்துகிறார். Washington Post க்கு கருத்து தெரிவிக்கையில் பென்ஸ் பின்வருமாறு அறிவித்தார் ''வடகொரியா வுடன் 25 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்டுவந்த பேச்சுவார்த்தைகள் தற்போது மாபெரும் தோல்வியை அடைந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன்.''

வடகொரியாவுடன் பேரம் பேசுவதற்கு அமெரிக்கா முனைய வில்லை, அதிலும் இந்த முறை எந்த வொரு நேரடி பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை.

CNN உடனான ஒரு தனிப்பட்ட நேர்காணலில் துணை ஜனாதிபதி, ''வடகொரியா அவர்களது அணுஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டங்களையும் முடிவுக்கு கொண்டுவருகிறார்கள், மேலும் இறுதியில் அவற்றை இல்லாதொழிக்கிறார்கள் என்பதை மட்டுமே அவர்களிடமிருந்து நாங்கள் கேட்கவேண்டும்'' எனத் தெரிவித்தார்.

குறிப்பாக, கடந்த வாரம் இறுதியில் (2017 April) நிகழ்த்தப்பட்ட வடகொரிய ஏவுகணை சோதனைச் தோல்விக்கு அமெரிக்க சைபர் நாசவேலை தான் பொறுப்பா என்று கேட்கப்பட்டபோது நேரடியாக விடையளிக்கப் பென்ஸ் மறுத்துவிட்டார். எங்கள் இராணுவத்தின் மின்னணு மற்றும் தொழில்நுட்ப திறன்களைப் பற்றி உண்மையில் என்னால் கருத்து தெரிவிக்க முடியாது'' என்று தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கையிலான வடகொரிய ஏவுகணை சோதனைகளின் தோல்விக்கு ஒபாமா நிர்வாகத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு இணைய போர் திட்டம் (a cyber warfare program) தான் பொறுப்பாக இருக்கவேண்டுமென நம்பப்பட்டதாக கடந்த மாதம் New York Times பத்திரிகை தெரிவித்தது. இந்த வாரம் செய்தித்தாளில் வெளிவந்த தொடர் கட்டுரை ஒன்றில், ட்ரம்ப் நிர்வாகம் இந்தத் திட்டத்தை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்ட தாகவும், மேலும் ''ஏவுகணை சோதனைகளுக்கு எதிராக இந்த புதிய வகை ஆயுதங்களை பிரயோகிப்பது பற்றி எந்தவித மன உறுத்தலையும் கொண்டிருக்கவில்லை'' எனவும் அறிவித்தது.

ஒரு ஏவுகணை சோதனை குறித்த நாசவேலையானது பதிலடி கொடுக்க அழைப்புவிடுக்கும் ஒரு போர் நடவடிக்கையாகவே உள்ளது. இன்னும் New York Times இன் கருத்துப்படி, ட்ரம்ப் நிர்வாகம் இத்தகைய நடவடிக்கைகளை முறையானதாகவே கருதுகிறது. ஏனெனில் ஐ.நா. பாதுகாப்பு குழு வடகொரியாவின் ஏவுகணை சோதனைகளுக்குத் தடைவிதித்துள்ளது. வடகொரியா மீதான ஐ.நா வின் தீர்மானங்கள் பொருளாதாரத் தடைகள் வரையிலும் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருந்தாலும் கூட, இராணுவ சக்தியை பிரயோகிப்பது உட்பட எந்தவொரு நடவடிக்கையையும் நியாயப்படுத்த இந்தத் தர்க்கத்தை பயன்படுத்தலாம்.

வடகொரியாவின் Rodong Sinmun செய்தித்தாளில் அமெரிக்க சைபர் நாசவேலை சம்பந்தப் பட்ட அபாயங்கள் குறித்து அடிக் கோடிட்டுக் காட்டப் பட்டிருந்ததானது, ''ஞாயிறன்று ஏவுகணைச் சோதனை தோல்வியடைந்ததற்கு ஒரு அமெரிக்க சிறப்பு நடவடிக்கையே பொறுப்பு'' என்பதை சுட்டிக்காட்டியதுடன், ''அமெரிக்காவின் போர் வெறி மற்றும் பொறுப்பற்ற செயல்கள்'' குறித்து கண்டனம் செய்தது.

பியோங்யாங்கின் சொந்த இராணுவவாத விடையிறுப்பு வடகொரியாவை ''ஒரு போக்கிரி நாடாக'' அமெரிக்காவையும், உலகத்தையும் அச்சுறுத்துகின்றதென வழமையாகக் கண்டனம் செய்யும் அமெரிக்க நிர்வாகம் மற்றும் ஊடகங்களினால் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஏவுகணைகள் பசிபிக் ஊடாக சென்று ஒரு அமெரிக்க நகரத்தை நெருப்பில் மூழ்கடிப்பதை காட்டுகின்ற ஒரு காணொளி காட்சியை இந்த ஆட்சி வெளியிட்டது.

**''கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், சிரியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் எங்களது புதிய ஜனாதிபதியின் வலிமையையும், உறுதிப்பாட்டையும் இந்த உலகம் கண்டது. இந்தபிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆயுதபடைகளின் வலிமையையும், உறுதிப்பாட்டையும் வடகொரியா சோதித்து பார்க்க முனைவது நல்லது அல்ல'' எனவும் எச்சரித்தார்.**

வடகொரியாவுக்கு எதிரான போர் குறித்து தினமும் அமெரிக்கா போர் முரசு கொட்டுவது தொடர்கிறது. அமெரிக்க பிரதிநிதிகள் சபை பேச்சாளரான பால் ரியான் பிரிட்டனில் பேசுகையில் பின்வருமாறு அறிவித்தார்: ''உண்மையில் இராணுவ பலத்தை ஈடுபடுத்தவேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை, என்றாலும் நாங்கள் அனைத்து வாய்ப்புகளையும் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும்.



(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




137

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### *தீச்சுவாலை: ஒரு தீர்க்கமான சமர்*

மூன்றே நாளில் நொருக்கிச் சிதைக்கப்பட்டு முன்னேற்ற முயற்சிகளில் மூக்குடைபட்ட சிறிலங்காப் படையின் தாக்குதல் பிரிவுகள், தமது பழைய நிலைகளுக்கே விரட்டியடிக்கப்பட்டுள்ளன. ஆகக் குறைந்தது – 600 துருப்புகள் கொல்லப்பட, மிதிவெடிப் பொறிகளுக்குள் சிக்குண்டு கால்களை இழந்த நூற்றுக்கணக்கானவர்கள் உட்பட, இரண்டாயிரத்து இருநூறு துருப்புகள் காயமுற்றன. விடுதலைப் புலிகளின் தரப்பில் ஆண்களும் பெண்களுமாக – 121 போராளிகள் உயிரிழந்தனர்.

பலாலிக்கான அனைத்துப் பயணிகள் விமான சேவைகளையும் உடனடியாக இரத்துச் செய்த அரசு – மேலதிக வானூர்திகளையும் வரவழைத்துப் படுகாயமடைந்த தனது பெருந் தொகையான சிப்பாய்களை கொழும்பு, அநுராதபுரம் மற்றும் வவுனியா பிரதான வைத்தியசாலைகளுக்கு ஏற்றிப் பறிக்க, அவசர ஏற்பாட்டைச் செய்தது. வெற்றிச் செய்தியை அறிவிக்கவென பலாலியில் குவிக்கப்பட்டிருந்த செய்தியாளர்கள், அறிவிக்கப்படாத இடங்களை நோக்கி அவசர அவசரமாக நகர்த்தப்பட்ட, கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த படையினரின் தொகையை வைத்தே – அந்த மாபெரும் இராணுவத் தோல்வியின் பரிமாணத்தை தங்கள் கண்கொண்டு கண்டனர். ஒரு போர்த்துறை ஆய்வாளர் தனது கட்டுரையின் தலைப்பிலேயே கேள்வி எழுப்பினார், ''தீச்சுவாலை பற்றி எரியத் தவறியது ஏன்?''

தமிழ்ப் புலிகளுக்கு எதிராகச் சிறிலங்காப் படையினரால் எடுக்கப்பட்ட கடைசிப் படையெடுப்பு இந்தத் 'தீச்சுவாலை நடவடிக்கை' தமிழீழ விடுதலைப் புலிகளை, தாக்குதல் மற்றும் தற்காப்பு முறைகளில் அசாத்தியமான போரனுபவம் மிக்க வெல்வதற்கரிய ஒரு போர்ப் படை என நிரூபித்த ஒரு தீர்க்கமான சமர் அது.

இந்த மிகக் கேவலமான இராணுவத் தோல்விக்குப் பின்னர், தனது இராணுவ வழிமுறைக் கொள்கையைக் கைவிட வேண்டிய நிலைக்கு சந்திரிகா அரசு தள்ளப்பட்டது. இருந்த போதும், நோர்வே அரசால் முன்வைக்கப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான நகல் திட்டத்தைச் சாதகமாகப் பரிசீலிக்கவோ அல்லது விடுதலைப் புலிகளுடன் ஒரு சமரசப் பேச்சுகளை நிபந்தனையற்றுத் தொடக்கவோ அது விரும்பவில்லை. இத்தகைய சூழ்நிலையில்தான், மிகப் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்திய, ஒரு பேரழிவைச் சிறிலங்கா அரசு சந்தித்தது.

### விமானத் தளம் தாக்கி அழிப்பு

2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள், 1983 ஆம் ஆண்டின் தமிழின அழிப்பு நிகழ்வுகளை நினைவுபடுத்துகின்ற நாளில், 15 கரும்புலி வீரர்கள் கொண்ட புலிகளின் சிறப்பு அதிரடித் தாக்குதலணி ஒன்று, கொழும்பின் புறநகர்ப் பகுதியில், சிறிலங்காவின் அதியுச்சப் பாதுகாப்பு வலையத் தொகுதி ஒன்றைத் தாக்கித் துவம்சம் செய்தது. தலைநகர் கொழும்பிலிருந்து 20 மைல் வடக்கே கட்டுநாயக்காவில் அமைந்திருந்த சிறிலங்கா வான்படையின் பிரமாண்டமான தலைமைத் தளமும், அதனை ஒட்டியிருந்த சிறிலங்காவின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையமுமே இந்தத் தாக்குதலின் இலக்காக அமைந்தன.






நீண்ட காலமாகத் திரட்டப்பட்ட புலனாய்வுத் தரவுகள் மற்றும் வேவுத் தகவல்களின் அடிப்படையில் மிகவும் துல்லியமாகத் தீட்டப்பட்ட பிரமிப்பூட்டும் ஒரு தாக்குதல் திட்டத்துடன் களம் இறங்கினர் கரும்புலிகள். பல வருடப் பயிற்சி அனுபவம் பெற்ற புலனாய்வுத் துறைக் கரும்புலி அணியுடன், மூத்த தளபதி கேணல் கடாபியின் 'தேசத்தின் புயல்கள்' கரும்புலிப் படையணியைச் சேர்ந்த வீரர்கள் சிலரும் இணைந்து, ஆறு மாத கால விசேட கடும் பயிற்சியின் பின் களம் குதித்தனர். இந்தத் தாக்குதல் நடவடிக்கை புலனாய்வுத்துறையின் மூத்த உறுப்பினர் கண்ணன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இவர் பல களமுனைகளைக் கண்ட வீரர். சிறந்த அணித் தலைவராகச் செயற்பட்டு வீர சாதனைகள் படைத்தவர். கட்டுநாயக்கா தாக்குதலின் திட்டமிடல் தொடங்கிக் கள நடவடிக்கையிலும் இவரது பங்கு முக்கியமானது.

இந்தக் கரும்புலித் தாக்குதல் அணிக்குப் பல்பரிமாணப் போரியல் பயிற்சி வழங்கப்பட்டது. இரவு நேரத் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி, இரவின் இருளில் நகரும் பயிற்சி, நவீன ரக ஆயுதங்கள், இலத்திரனியல் கருவிகளைக் கையாளும் பயிற்சி, தானியங்கி மற்றும் நேரக் கணிப்புக் குண்டுகளைப் பற்றிய விசேட பயிற்சி எனப் பலரகப் பயிற்சி இந்தத் தாக்குதல் அணிக்கு வழங்கப்பட்டது.

தாக்குதலுக்குக் குறிப்பிட்ட நாளுக்கு முன்னராகவே கட்டுநாயக்கா விமானத் தளத்தை அண்மித்த பகுதிக்குச் சென்றடைந்த எமது போராளிகள், தாக்குதல் நாளுக்கு முதல்நாள் இரவு தமது இரகசிய நகர்வு மூலமாக இறுகப் பாதுகாக்கப்பட்ட விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவினர். சரியாக 37 கிலோவிலிருந்து 25 கிலோ எடையுள்ள ஆயுதங்கள், வெடிபொருள்களையும் ஒவ்வொரு போராளிகளும் காவிச் சென்றனர். புலிகளின் இராணுவச் சீருடை பூண்டு, PK இலகு இயந்திரத் துப்பாக்கிகள், RPG உந்து கணைச் செலுத்திகள், 40 MM எறிகுண்டு செலுத்தி, தானியங்கிக் குண்டுகள், நேரக் கணிப்புக் குண்டுகள், கையெறி குண்டுகள், இரவுப் பார்வைச் சாதனங்கள், ஒலியடக்க இயந்திரத் துப்பாக்கி, T – 56 – 2 ரகத் துப்பாக்கிகள் மற்றும் மேற்படி ஆயுதங்களுக்கான ஆயிரக்கணக்கான ரவைகள் ஆகியவற்றுடன் பூரணமாக ஆயுதம் தரித்த புலிகளின் அதிரடியணி, தமிழீழ நேரப்படி சரியாக காலை 3:20 மணிக்குத் தாக்குதலை ஆரம்பித்தது. ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே நடந்துகொண்டிருப்பதைக் கிரகித்துக் கொள்வதற்கே போதிய அவகாசமில்லாமல் சிங்களப் படை திகைத்து நிற்க, அவர்களது வான்படைக் கலங்களை நொருக்கிப் பலத்த நாசத்தை விளைவித்தனர் புலிகள். இஸ்ரேலிய தயாரிப்பு ஒலி மிகை வேக உந்து விசை Kfir போர் விமானங்கள் 2, ரஷ்யத் தயாரிப்பான MI – 24 தாக்குதல் வானூர்தி 1, MI – 17 தாக்குதல் வானூர்திகள் 2, சீனத் தயாரிப்பான 3 நவீன பயிற்சி விமானங்கள் என்பன அழிக்கப்பட்டன. இந்த வான்படைக் கலங்கள் தீயிலே வெந்து உருகிக் கொண்டிருக்க, புலி வீரர்களுக்கும், சிறிலங்கா வான்படையினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது.

நாலாபுறமும் எதிரிப் படைகளால் சூழப்பட்டு மூர்க்கமான தாக்குதலுக்கு இலக்கான போதும் பதற்றமின்றி, நிதானமாக நின்று, புலி அணியை வழி நடத்திய கண்ணன், தமது போர்த் திறனால் விமானப் படையினருக்கு உச்ச இழப்பை ஏற்படுத்தினார். விமானத் தளச் சண்டையில் நான்கு கரும் புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். சண்டை தொடங்கிய ஒரு மணிநேரத்தின் பின்பு, அருகிலிருந்த பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய வளாகத்துக்குள் புலிகளின் தாக்குதல் அணி ஊடுருவியது. விமானங்களிலிருந்தும் விமான நிலைய வளாகத்தினுள்ளிருந்தும் பொது மக்கள் பாதுகாப்பாக விலகிச் செல்ல அவகாசமளித்த புலி வீரர்கள், பயணிகள் விமானங்களையும் எண்ணெய்க் குதங்களையும் தாக்கி அழித்தனர். A 330, A 340 ரகங்களைச் சேர்ந்த நவீன விமானங்கள் உட்பட 'சிறிலங்காவின் எயர் லைன்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான மூன்று விமானங்கள் அழிக்கப்பட, இன்னும் மூன்று விமானங்கள் பலத்த தேசத்துக்கு உள்ளாக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாகப் 11 இராணுவ மற்றும் பயணிகள் விமானங்களை அழித்த புலிகள், இந்தத் தாக்குதலில் இன்னும் மூன்று பயணிகள் விமானங்களைப் பலத்த சேதத்துக்கு உள்ளாக்கினர். நீண்ட நேரமாகக் களத்தில் நின்றுபிடித்து, பலத்த நாசத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த புலிகளின் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த அரசு, மேலதிக துருப்புகளை கட்டுநாயக்காவுக்கு அனுப்பி வைக்க, விமான நிலையம் ஒரு சமர்க்களமாக மாறியது. அதிகாலை முதல் காலை 7 மணி வரை நடைபெற்ற கடும் மோதல்களின் பின்னர், புலிகளின் தாக்குதல் அணியிடமிருந்த ஆயுத வெடிபொருள்கள் தீர்ந்து போன நிலையில் சண்டை முடிவுக்கு வந்தது. சிலர் தாக்குதலில் களப்பலியாக, வேறு சிலர் தமது வெடிகுண்டு அங்கியை வெடிக்க வைத்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். தாக்குதற் தளபதி கண்ணன் உட்பட மொத்தம் 14 கரும் புலி வீரர்கள் இந்தத் தாக்குதலில் உயிர் நீர்த்தனர். தாக்குதல் அணியின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவரான முகிலன் களத்திலிருந்த மீண்டு தலைமையகம் சென்றடைந்தார்.

(தொடரும்...)

காலைக்கதிர்



# இந்தியாவுடன் கருமம் ஆற்றும்போது அவதானம், உன்னிப்பு மிக அவசியம்

## ஜனதா விமுக்தி பெரமுனவின் கருத்து இது

கொழும்பு,மே 06

இந்தியாவுடன் கருமங்களைக் கைக்கொள்ளும் போது, இலங்கை அரசு மிகவும் அவதானமாகவும் உன்னிப்பாகவும் செயற்பட வேண்டும்.

-இவ்வாறு அரசுக்கு புத்திமதி கூறியுள்ளார். ஜனதா விமுக்திப் பெரமுனவின் தலைவர் அனுராகுமார திஸநாயக்கா.

குறிப்பாக இந்தியாவுடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடும் போது, மிக உன்னிப்பாகவும் அவதானத்துடனும் ஆறுதலாகவும் கருமமாற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

எந்த ஒரு நாடும் தனித்துச் செயற்பட்டு முன்னேறுவது என்பது இலகுவான ஒன்றல்ல. ஆனால், ஏனைய தரப்புக்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் போது இலங்கைக்கு நன்மையும் நலன்களும் கிடைக்க வல்லனவாக அமைய வேண்டும்.-

குறிப்பாகச் சொல்வதானால், மஹிந்தவின் அரசு செய்தது போன்று, எமது நாட்டின் நலன்களையும் புறந்தள்ளி தனக்கும் தம்மைச் சார்ந்தோருக்கும் கையில் காசு கிடைக்க சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது என்றும் அனுரகுமார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் இயற்கை வளங்களை அடுத்த தரப்பினர்களிடம் ஒப்படைத்து, நாம், எமது மக்களின் எதிர்காலத்தைப் பாழடிக்க உதவக் கூடாது.

குறிப்பாகத் திருகோணமலையின் எண்ணெய் வளங்களை பிறர் அனுபவிக்க எமது மக்கள் ஒட்டாண்டிகளாக மாறுவதற்கு இடம் அளிக்கக் கூடாது என்றும் அனுர குமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இப்போதைய நாளில் அரசு இதனைத் தலைமேற்கொண்டு செயற்படும் என்று எதிர்பார்க்கலாமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## யாழ். திறந்த பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் சிங்களமொழி வகுப்பு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் சிங்கள மொழி வகுப்புக்கள் நடத்தப்பட உள்ளன. ஆரம்பப் பாடநெறி ஒரு வருடமும், அடிப்படை பாடநெறி ஒருவருடமும் நடத்தப்பட உள்ளது. வார இறுதி நாள்களில் நடைபெறும் இவ்வகுப்புக்களுக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ்.-கண்டி வீதி 155 ஆம் கட்டையில் அமைந்துள்ளன. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்துடன் நேரடியாகவோ அல்லது 021 2283970 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ, www.ou.ac.lkஎனும் இணையத்தள முக வரியிலோ பெற்றுக் கொள்ள முடியும் என வளாக உதவிப் பணிப்பாளர் நா. கமிலாஸ் தெரிவித்துள்ளார்.

## காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய கற்கை நெறி

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மூன்று மாதகால புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நீர்க்குழாய் பொருத்துநர், அறை பராமரிப்பாளர் ஆகிய கற்கை நெறிகளைக் கற்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் அல்லது வலந்தலைச் சந்தியிலுள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் - எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு தொழிற் பயிற்சி அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ச)

# வாசகர் கருத்து மேடை

## ஆண்களுக்கு வழங்குவது போன்று பெண்களுக்கும் ஊதியம் கிடைக்குமா?

தமிழர் தாயகமான யாழ். குடாநாட்டில் வேலையில்லா நிமித்தம் வர்த்தக நிலையம், அழகுமாடங்கள், வீட்டு வேலைகள் போன்ற பல்வேறு வேலைகளில் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே! இதில் மனதுக்கு வேதனை தரும் விடயம் இந்த தொழில் நிறுவனங்களில் வழங்கப்படும் ஊதியம் சரிபாதி குறைவு.

இவற்றைத் தட்டிக் கேட்டால் இருக்கும் வேலையும் பறிபோகும் என்பதால் அப்பாவிப் பெண்ணினம் வாய்மூடி மௌனிகளாகக் கொடுக்கும் ஊதியத்தைப் பெறுவது மிகப்பெரிய வேதனையிலும் வேதனை.

ஆனால், அரச சேவையில் பணியாற்றும் பெண்களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்படாதது பெரிதும் வரவேற்கத்தக்கது. இந்த நடைமுறையில் இருந்து பெண்கள் விடுதலை பெற புத்திஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து பெண்ணினத்தின் தனியார் நிலையங்களின் ஊதியத்தை உயர்த்தி ஏழைப் பெண்களின் வாழ்வுக்கு உதவ முன்வர வேண்டும்.

எமது தாயகத்துப் பெண்கள் எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெற்றவர்கள். போராட்ட காலத்தில் கூட சாதனை செய்து காட்டியவர்கள். இப்படிப்பட்ட பெண்ணினத்துக்கு ஆண்களை விட ஊதியத்தைக் குறைத்து வழங்குவது-பாரபட்சம் அல்லவா?

இது குறித்து எம்மவர்கள் சிந்திப்பார்களா?

வரணி வடக்கு அ.வரணியூரான்

## அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழியாகட்டும்!

கடந்த மேதினக் கூட்டம் நடைபெற்ற இடங்களிலும் அதனை அண்டியுள்ள இடங்களையும் சுத்திகரிக்கும் பணியில் ஒரு நாட்டின் அரச தலைவர் ஈடுபட்டார் என்ற செய்தியை பத்திரிகைகள் வாயிலாக அறிந்தபோது பரவசப்பட்டது எனது மனம்!.

இன, மத, மொழிகளுக்கப்பால் ஒரு மனிதன் என்ற ரீதியில் தன் உயர் நிலைகருதாது, சற்றுக்கீழே இறங்கிவந்து குப்பை அள்ளுவதென்பதும், அந்த மன உணர்வு எல்லோருக்கும் வரும் என்பதும் சொல்வதற்கில்லை.

தற்போது நாட்டில் பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள பொலித்தீன் பொருள்கள் குறித்து, அதை அகற்றுவதற்கும் அழிப்பதற்கும் பத்திரிகை ஊடகங்கள் உட்பட பலரும் பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு நாட்டின் ஜனாதிபதி தனது மக்களுக்கும் தனக்குக் கீழ் பணிபுரிபவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக நடந்து காட்டியுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்!

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி... என்பது போன்று ஜனாதிபதி மைத்திரிபாலவின் செயற்பாட்டை அந்தஸ்துப் பாராது ஒவ்வொருவரும் பின்பற்றுவார்களேயானால் கூடிய விரைவில் எமது தேசத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை இல்லாமற் செய்ய முடியும் அல்லவா!

ஒரு வாசகன் முல்லைத்தீவு





தேசிய கலை இலக்கியப் பேரவையால் கொக்குவில் முருகையன் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியின் நூற்றாண்டு ஆய்வரங்கில் கவிஞர் ராதையன்,க.வேல்தஞ்சன், ஐ.சாந்தன், க.தணிகாசலம், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பேராசிரியர் ஏ.மௌனகுரு ஆகியோர் பற்கேற்றனர். (ஐ-19)





ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் முத்தையன் கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவின் ஜீவநகர் கிராம மக்களுடன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பொருளாளரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான க. சிவநேசன் சந்திப்பு நடத்தினார்.

கிராம அலுவலரின் அலுவலகத்தில் கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கிராமத்தின் அவசிய தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. (ஐ)



நீரிழிவு நோய் தொடர்பாக விழிப்பூட்டும் முகமாக பத்துவைத்திய நிபுணர்கள் நீரிழிவு நோய் தொடர்பாக எழுதியகட்டுரைகள்அடங்கியநூலின்ஆயிரம்பிரதிகளை 'லிற்றோ காஸ்' விநியோகஸ்தர்களான எஸ்.வி.முருகேசு நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நீரிழிவு கழகத்தினர் வெளியிட்டுள்ளனர்.

இவற்றை நீரிழிவு நோயாளர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக அண்மையில்வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம், எஸ்.வி.முருகேசு நிறுவன அதிபர் எம்.குணரட்ணம் கையளிக்கிறார். இந்நிகழ்வில்நீரிழிவு கழக தலைவர் தி.மைக்கல், செயலாளர் க.கணபதி, பொருளாளர் ச.நடராசா, பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## டெங்கு அச்சுறுத்தல்: 106 பாடசாலைகள் மீது வழக்குத் தாக்கல்

டெங்கு அச்சுறுத்தல் காரணமாக மேல் மாகாணத்தின் 106 பாடசாலைகளுக்கு எதிராக மீது வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டடங்களில் டெங்கு அச்சுறுத்தல் தொடர்பான ஆய்வொன்று கடந்த வாரம் நடைபெற்றது. சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின்அறிவுறுத்தலின் பேரில் இந்த ஆய்வு நடவடிக்கை இடம்பெற்றது.

இதன் கீழ், மேல் மாகாணத்தின்பாடசாலைகளுக்குச் சொந்தமான 10 ஆயிரத்து 89 கட்டடங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றில் நுளம்பு அச்சுறுத்தல் காணப்பட்ட 630 பாடசாலைகளுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 106 பாடசாலைகளிற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# இனவாதப் போராட்டங்களை முடக்கவே பொன்சேகா தலைமையிலான படையணி

## உரிமைகளுக்காகப் போராடுவோருக்கு எதிரானதல்ல என்கிறார் விக்கிரமபாகு கருணாரத்ன



கொழும்பு, மே 06

பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா தலைமையில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் படையணி இனவாத, மதவாத சிந்தனையில் போராட்டங்களில் ஈடுபடுவோரை முடக்கும் பிரிவாகவே அமையும் என்று நவ சமசமாஜக் கட்சி தெரி வித்துள்ளது.

வடக்கு மக்கள் போன்றுஉண்மையான கோரிக்கைகளையும், உரிமைகளையும் வென்று கொள்ளும் நோக்கில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அடக்குவதற்காக அந்தப் படையணி செயற்படாது. அந்தப் படையணிக்கு தனது முழுமையான ஆதரவு அளிக்கப்படும் என்று அந்தக் கட்சி மேலும் குறிப்பிட்டது.

நவசமசமாஜக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரம பாகு கருணாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மக்களின் போராட்டங்களுக்குஉதவி வழங்குவோம். ஏனென்றால் நாங்களே அந்தப் படையணி. விடயங்களை ஏற்பாடு செய்து நாங்கள்தான் பொன்சேகாவுக்குக் கூறுவோம்.

வடக்கு மக்களின் உரிமைகளை வழங்க இனவாத, மதவாத பிரிவினரே எதிர்ப்பு வெளியிடுகின்றனர். பொன்சேகா அல்லர். இராணுவத்துக்குள்ளும் இப்படிப்பட்டவர்கள் உள்ளனர். பொன்சேகாவை கொலை செய்து வெளியேற்றுவதற்கு திட்டமிட்டவர்கள் இராணுவத்தில் உள்ளனர். அவர்களே இன்றும் இன, மதவாத சிந்தனையில் உள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத் தாபன ஊழியர்கள் உண்மையிலேயே அவர்களது கோரிக்கைக்காகவா தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர்? இல்லை. அதேபோல அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட மருத்துவத் துறையினரது போராட்டமும் உண்மையான கோரிக்கைகளுக்காக அல்ல. அவர்கள் இந்த அரசு எமது கோரிக்கைக்குத் தீர்வு வழங்காவிட்டால் அரசு கவிழும் வரை நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று சூளுரைக்கின்றனர்.

எனவே, அவர்கள் தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்துவது தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அல்ல, மாறாக அரசியல் நோக்கங்களுக்காகவே ஆகும். - என்றார்.

# விசாரணை அறிக்கையில் குறிப்பிட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும்!

## களுத்துறைச் சூட்டுச் சம்பவ அறிக்கை தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதன்

கொழும்பு, மே 06

களுத்துறைச் சிறைச்சாலை பஸ்களின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து கையளிக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், குறிப் பிடப்பட்டிருக்கும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி, மூவர் அடங்கிய குழுவினால் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்ட அறிக்கையைபெற்றுக் கொண்டதன் பின்னர், கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு-3இல், அமைந்துள்ள அமைச்சின் காரியாலயத்தில் வைத்தே, அந்த அறிக்கை, அந்தக் குழுவின் தலைவரான முன்னாள் நீதிபதி ரூமி மன்சூரினால்கையளிக்கப்பட்டது.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி, மிகவும் குறுகிய காலத்துக்குள் அறிக்கையைச் சமர்ப்பித்த குழுவுக்கு நன்றி. சிறைச்சாலைகளுக்கு அலைபேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விவகாரம் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில், விளங்கவில்லை. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை, அமைச்சின் செயலாளர் ஊடாக விரைவில் நடைமுறைப்படுத்துவோம்.

இந்தச்சம்பவம்இடம்பெற்ற தினத்தன்று, குறிப்பிட்ட சிறைச்சாலை பஸ்களுக்கு, போதிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது உண்மை. எனினும், அவர்களைக் குறை கூறுவதற்கு இல்லை. எமது திணைக்களத்திலுள்ள பாதுகாப்பு அதிகாரிகளைச் சரியான முறையில் நாம் பயன் படுத்தியிருக்க வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்கு, உரிய பலமான பாதுகாப்பை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம். அதாவது, விமான நிலையத்தில் சோதிக்கப்படும்தொழில்நுட்பங்களைப் போன்று,



குறைந்தது முக்கிய சிறைச்சாலைகளிலாவது அவற்றைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். - என்றார்.

இதேவேளை களுத்துறைச் சிறைச்சாலை பஸ்கள் இரண்டை இலக்குவைத்து, கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களில், பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவர் சமயங் உள்ளிட்ட 7 பேர் கொல்லப்பட்டிருந்தனர். மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக, சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சால், ரூமி மர்சூக்தலைமையில், முன்னாள் பாதுகாப்புச் செயலகத்தின் மேலதிகச் செயலாளர் எஸ். மெதவெல, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன ஆகிய மூவர் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க குடியுரிமையை விட்டுக்கொடுக்க மாட்டேன்

## பஸில் திட்டவட்டம்



அமெரிக்க குடியுரிமையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ராஜபக்ஷாக்களை அரசியலிலிருந்து ஓரம் கட்டும் நோக்கிலேயே 19 ஆம் திருத்தச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.- என்றார்.

இதேவேளை பஸில்ராஜபக்ஷ அமெரிக்கக் குடியுரிமையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டிருப்பாரானால் அவரால் இலங்கைத் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் கல்வி வலயத்தில் ஒருதொகுதிச் சீருடைகள் மாயம்!

அநுராதபுரம், மே 06

கஷ்டப்பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்காக விநியோகிப்பதற்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 18 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலைச் சீருடைகள் காணாமற் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் கல்வி வலயத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனவே, இதுதொடர்பில் விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ்.பிரியந்த பிரனாந்து வடமத்திய கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதமளவில் அநுராதபுரம் விவேகானந்தர் தமிழ் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி சீருடை வலயக் கல்வி பணிப் பாளரின் உத்தரவுக்கமைய லொறி ஒன்றில் ஏற்றப்பட்டுள் ளது.

எனவே, இது தொடர்பான விசாரணைகளை சரியான சாட்சியாளர் முன்னிலையில் விசாரிக்குமாறு ஆசிரியர் சங்கத் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசம் எதிர்பார்க்கும் வகையில் மஹிந்தவின் உயிரைப் பலிகொடுக்கும் முயற்சியை கைவிடுங்கள்!

## நல்லாட்சி அரசை வலியுறுத்துகிறார் கெஹலிய

கொழும்பு, மே 06

சர்வதேசம் எதிர்பார்க்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிரைப் பலிகொடுப்பதற்கு எடுக்கின்ற முயற்சிகளை நல்லாட்சி அரசு இத்துடன் கைவிட்டுவிட வேண்டும் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மே தினத்தன்று வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தை நடத்த எம்மால் முடிந்தது. இந்த நாட்டின் ஜனநாயக சோசலிசக் குடியரசின் 5 ஆவது ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகாரிகள் 45 பேர் தற்போது நீக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டரை வருடங்களாக இது தொடர்பில் தாக்கம் காணப்பட்டது. இறுதியாக இராணுவப்பாதுகாப்பை நீக்கிவிட்டு அவருக்கு திருப்தி ஏற்படும் வகையிலான அதி களவு பாதுகாப்பை அளிப்பதாக உறுதியளித்தனர்.

ஆனால், தற்போது இது புதிய பிரச்சினையாக எப்படி உருவெடுத்துள்ளது. மஹிந்த மட்டுமல்ல, சாதாரண சமூகம் பற்றிப் பேசுவோருக்கும் இது பிரச்சினையாகவே இருக்க வேண்டும்.

போர் நிறுத்தப்பட்டுள்ள போதிலும், பிரிவினைவாத, போராளிகளின் கோரிக்கை மற்றும் பேதங்களை ஏற்படுத்தும் பிரிவினரின் முயற்சிகள் இன்னும் நிறுத்தப்படவில்லை. - என்றார்.

### அந்நிய செலாவணி வழக்கு:

# காணொலி மூலம் சசியிடம் விசாரணை நடத்த உத்தரவு!

எழும்பூர்,மே 06

அந்நிய செலாவணி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சசிகலா நடராஜனிடம் காணொலி மூலம் விசாரணை நடத்துவதற்கு எழும்பூர் பொருளாதார நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.


இந்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிபதி ஜாகீர் உசேன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட சசிகலாவின் சகோதரியின் மகனான பாஸ்கரன் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அவரிடம் விசாரணை மேற்கொண்ட நீதிபதி, இந்த வழக்கை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அத்துடன், மேற்படி குற்றச் சாட்டுத் தொடர்பில் சசிகலாவிடம் காணொலி மூலம் விசாரணை நடத்த அனுமதி வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவுக்கு நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

ஜெயா தொலைக்காட்சிக்கு வெளிநாட்டில் இருந்து உபகரணங்கள் வாங்கினார்கள் என சசிகலா, அவரது சகோதரியின் மகன் பாஸ்கரன் ஆகியோர் மீதும் ஜெயா தொலைக்காட்சி நிர்வாகம் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்நிலையில், 1996-1997 ஆம் ஆண்டுகளில் அமுலாக்கப்பிரிவு அதிகாரிகள் தனித்தனியாக அந்நிய செலாவணி வழக்குகளைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மீனவர் விடுதலை தொடர்பில் இலங்கையை வலியுறுத்துக!

### மோடியிடம் ஸ்டாலின் கோரிக்கை

இலங்கை செல்லும் பிரதமர் மோடி, 5 தமிழக மீனவர்கள் மற்றும் 134 படகுகளை விடுவிப்பது குறித்து அந்த நாட்டு அரசை வலியுறுத்த வேண்டும் என தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாநில அரசு கடிதம் எழுதுவதோடு நிறுத்திக் கொள்கிறது. இந்நிலையில், மே மாதம் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறும் வெசாக் நிகழ்வில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்கிறார் எனச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இந்தியப் பிரதமரின் இந்தப் பயணத்தின்போது நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் இருக்கும் தமிழக மீனவர்களின் படகுகள் பிரச்சினைக்கு நல்லெண்ண அடிப்படையில் தீர்வு காண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும். மேலும், இருநாட்டு மீனவர்களுக்கு இடையிலும் தொடர்ந்து நடைபெற்று வரும் பேச்சின் முக்கியத்துவம் கருதி இந்த 134 படகுகளையும், கைது செய்யப்பட்டுள்ள 5 மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். -என்றுள்ளது. (ச)

# பலவீனமாக உள்ளது அ.தி.மு.கவின் ஆட்சி!

## எப்போது வேண்டுமானாலும் தேர்தல் வரலாம்



### பா.ஜ.கவின் தமிழிசை விமர்சனம்

தமிழகத்தில் அ.தி.மு.கவின் ஆட்சி பலவீனமாக உள்ளது. ஆளுங்கட்சியின் நிர்வாகத் திறமையின்மைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம்.

-இவ்வாறு பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

கோவையில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் எப்போது வேண்டுமானாலும் பொதுத் தேர்தல் வர வாய்ப்புள்ளது. ஆட்சி நடத்துபவர்களின் செயற்பாடுதான் தேர்தல் நடைபெறுமா? இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

தமிழகம் ஒரு மாற்றத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறது. மாற்றம் தேவை. ஆனால், அது ஆட்சி செய்து கொண்டு இருக்கும் கட்சியாகவும், ஏற்கெனவே ஆட்சி செய்த கட்சியாகவும் இருக்கக் கூடாது என்பது மக்கள் விருப்பமாக இருக்கிறது.

இந்தச் சூழலில் தமிழக மக்கள் விரும்பும் மாற்றத்தைக் கொடுக்கும் கட்சியாக பா.ஜ.க. தான் இருக்க முடியும். தமிழகத்தில் பா.ஜ.கவை வலுப்படுத்தும் திட்டத்துடன் தேசிய தலைவர் அமித்ஷா எதிர்வரும் 11 ஆம் திகதி தமிழகம் வர உள்ளார். -என்றார். (ச)

## உத்தரப் பிரதேசத்தில் விபத்து: 14 பேர் சாவு!



உத்தரப் பிரதேசத்தின் எட்டா மாவட்டத்திலுள்ள சனாரன் நீம் கிராமத்தில் பயணிகள் வாகனம் (டெம்போ) ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் கால்வாய் ஒன்றினுள் விழுந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்தனர். 28 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான அந்த டெம்போவில் 40 பேர் பயணம் செய்தனர். மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. வாகன சாரதி தனது வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே இந்த விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## நிர்பயா பாலியல் பலாத்கார கொலைவழக்கு: நால்வருக்கும் மரண தண்டனை!

### உறுதி செய்தது உச்ச நீதிமன்றம்






நிர்பயா பாலியல் பலாத்கார வழக்கில் குற்றவாளிகள் நான்கு பேரின் மரண தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இந்தச் சம்பவத்தில், குற்றவாளிகள் தொடர்ந்த மேன்முறையீட்டு வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மேன்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்த நீதிபதிகள் அவர்களுக்கான மரண தண்டனையை உறுதி செய்தனர்.

டில்லியில் கடந்த 2012 ஆம் ஆண்டு நிர்பயா என்ற மருத்துவ மாணவி ஓடும் பஸ்ஸில் வைத்து கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், ராம்சிங் என்பவர் டில்லி சிறையில் தற்கொலை செய்து கொண்டார். மற்றொரு இளம் குற்றவாளி 3 ஆண்டுகள் தண்டனையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், மீதமுள்ள 4 பேருக்கும் விசாரணையின் பின்னர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்த நிலையில், இந்த உத்தரவை டில்லி உயர்நீதிமன்றம் கடந்த 2014 ஆம் ஆண்டு உறுதி செய்தது. இந்த நிலையில் இந்தத் தண்டனையை எதிர்த்து குற்றவாளிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

# குஜராத்தில் காந்தி படித்த பாடசாலைக்கு 164 ஆண்டுகளுக்கு பின்னர் மூடுவிழா!



அருங்காட்சியகமாக அது மாற்றம் பெறுகிறது

ராஜ்கோட்,மே 06

குஜராத் ராஜ் கோட் டில் மோகன்தாஸ் காந்தி உயர்நிலைப் பள்ளி என அறியப்பட்ட, மகாத்மா காந்தி கல்வி கற்ற பாடசாலையை அருங்காட்சியகமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளமையால், 164 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பாடசாலை மூடப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், பள்ளி நிர்வாக அதிகாரிகள் மாணவர்களுக்குப் பள்ளியை விட்டு வெளிச்செல்வதற்கான சான்றிதழ்களை வழங்கத் தொடங்கியுள்ளனர்.

பாடசாலையை மூடிவிட்டு அதனை அருங்காட்சியகம் ஆக்கும் திட்டத்தைக் கடந்த வருடம் ராஜ்கோட் மாநகராட்சி குஜராத் மாநில அரசுக்கு அனுப்பி வைத்தது. மாநகராட்சியின் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட குஜராத் மாநில அரசு, அந்த மாநில கல்வித்துறையை இதற்கான நடவடிக்கையை தொடங்குமாறும், பாடசாலைக் கட்டடத்தை மாநகராட்சியிடம் வழங்குமாறும் கேட்டுக்கொண்டமையை அடுத்து, அருங்காட்சியகப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியம் காந்திஜி, சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் பிற முக்கிய நபர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தாங்கி நிற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி இந்தப் பாடசாலையில் கடந்த 1880 முதல் 1887 ஆம் ஆண்டுகள் வரைக் கற்றுள்ளார். தொடக்கத்தில் ராஜ்கோட் உயர்நிலைப் பள்ளி என அறியப்பட்ட இந்தப் பாடசாலை பிரிட்டிஷ் ஆட்சியின் போது 1853 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் தொடங்கப்பட்டது. அப்போதைய நாட்களில் இந்த பாடசாலை மட்டும் தான் சவுராஷ்டிரா பகுதியில் இருந்த ஒரே ஒரு ஆங்கில மொழிக் கல்வியைப் பயிற்றுவிக்கும் பாடசாலையாகும். 1947 ஆம் ஆண்டுக்குப் பின் இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் மோகன்தாஸ் காந்தி உயர்நிலைப் பள்ளி எனப் பெயர் மாற்றப்பட்டது.

பாடசாலையின் பெயரில் காந்தியின் பெயர் இணைக்கப்பட்டிருந்தாலும், இப்போது இந்தப் பாடசாலை மாணவர்களுக்குக் கல்வியைப் போதிப்பதில் மோசமானபதிவையே பெற்றுள்ளது. (ச)

## அரச பொறுப்பிலிருந்து விலகுகிறார் எலிசபெத்தின் கணவர்



பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும் எடின்பரோ பிரபுவுமான பிலிப், வயது முதிர்வு காரணமாக அரச கடமைகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

இளவரசர் பிலிப்பின் இந்தத் தீர்மானத்தை மகாராணியும் ஆதரித்துள்ளார் என்று அரண்மனையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அடுத்த மாதத்துடன் 96 வயதை எட்டும் பிலிப், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரையான திட்டமிடப்பட்ட கடமைகளில் ஈடுபடுவார். புதிய அழைப்பிதழ்களை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, முழு அரசவேலைத் திட்டங்களையும் மகாராணியே தொடர்வார் என்று அரண்மனை தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# பொறுமையைச் சோதிக்காதீர்கள்; மோதினால் விபரீதம் தான் ஏற்படும்!



## சீனாவுக்கு வடகொரியா எச்சரிக்கை

எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். அணு ஆயுத ஏவுகணை தொடர்பாக எங்களோடு மோதினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று சீனாவுக்கு வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் வடகொரிய அரச ஊடகம் ஒன்று வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடகொரியாவின் பொறுமையைச் சோதிக்கும்படி சீனா நடந்து கொண்டால் அதற்கான கடும் விளைவுகளை அந்நாடு சந்திக்கும்.

எங்களுடன் வைத்திருக்கும் உறவைச் சீனா பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதை விடுத்து எங்கள் அணுச் சோதனையில் தேவையற்ற தலையீடுகளை ஏற்படுத்த முனைந்தால் கடுமையான விளைவுகளும், விபரீதங்களும் ஏற்படும்.

பீஜிங் தன் நாட்டின் பாதுகாப்புக்காக நன்றியுடன் இருக்க வேண்டும்.- என்றுள்ளது.

வடகொரியாவின் தொடர் அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளைத் தொடர்ந்து, அமெரிக்கா அந்தநாட்டுக்கு எச்சரிக்கை விடுத்தது.

எனினும் வடகொரியா அதற்கெல்லாம் செவி சாய்க்காமல் தன்னுடைய சோதனை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

சர்வதேச நாடுகள் பல வடகொரியாவுக்கு எச்சரிக்கைவிடுத்ததுடன், அதனை கைவிடுமாறும் கேட்டனர்.

ஆனால், இதுவரை வடகொரியா அவர்களின் வேண்டுகோள்கள் எதனையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

குறிப்பாக, அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் நேரடியாகவே தங் கள் கண்டனத்தை வெளி யிட்டிருந்தன.

இந்தநிலையில் வடகொரியாவின் செயற்பாடுகள் தொடர்ந்தும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தது.

இதனால் சீனா தன்னுடைய அதிருப்தியை வெளியிட்டது. இருப்பினும் இதுதொடர்பில் அந்நாட்டு அரச ஊடகம் சீனாவுக்கு எச்சரிக்கை விடும் அளவுக்கு கடுமையாகச் சாடியுள்ளது. (எ)

## வடகொரியா மீது கடும் பொருளாதாரத்தடை விதிப்பதற்கான சட்டமூலத்துக்கு அனுமதி!

வடகொரியா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கான சட்டமூலத்துக்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடகொரியாவின் கப்பல் தொழில்துறை மற்றும் வணிக நிறுவனங்களை இலக்குவைத்து முன்வைக்கப்பட்ட இந்தப் பொருளாதாரத் தடைச்சட்டமூலத் துக்கான வாக்கெடுப்பு அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது.

இதற்கு உறுப்பினர்கள் 419 பேர் ஆதரவாகவும் ஒருவர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

அணுசக்தித்திட்ட விரிவாக்கம் தொடர்பில் சர்வதேச நாடுகள் அக்கறை கொண்டுள்ள நிலையில் வடகொரியாவுக்கு ஒரு வலுவான செய்தியை மேற்படி சட்டமூலம் அனுப்பிவைக்கும் என்று சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சட்ட மூலத் துக்கு பிரதிநிதிகள் சபையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் செனற்சபை அனுமதி வழங்க வேண்டும். அதன்பின்னரே ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சட்டமூலத்தில் கையெழுத்திட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## உலகின் ஏனைய நாடுகளை எச்சரிக்கும் வகையில்

# சக்தி மிக்க ஏவுகணையை தயாரித்துள்ளது ரஷ்யா!



உலகின் ஏனைய நாடுகளுக்கு எச்சரிக்கை தரும் வகையில் சக்தி வாய்ந்த ஏவுகணையை ரஷ்யா தயாரித்துள்ளது. அதை அடுத்த ஆண்டு வெளியிடவுள்ளது.

ரஷ்யா ஏற்கனவே Satan என்னும் சக்தி வாய்ந்த ஏவுகணையைத் தயாரித்து வெளியிட்டு உலக நாடுகளைமிரளச் செய்தது.

இந்தநிலையில், Satan 2 என்று குறிக்கும் வகையில் RS-28 Sarmat என்னும் உலகின் கனமான மற்றும் சக்தி வாய்ந்த ஏவுகணையைத் தயாரித்து வருகிறது.

Sarmat ஏவுகணை இது வரையில்லாத அளவில் 11 ஆயிரம் மைல்கள் செல்லும் திறனுடையதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஏவுகணை பிரான்ஸின் ஒரு பகுதியையே அழிக்கும் அளவுக்கு திறன் கொண்டதாகும்.

தொழில்நுட்பத்தைப் பொறுத்த வரையில் உலகின் பெரிய ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பாகக் கருதப்படும் தென்கொரியாவின் 'தாட்'டை விட Sarmat சிறந்த வகையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

இந்த ஏவுகணை அடுத்த வருடம் வெளியிடப்படவுள்ளது. இது தொடர்பில் ரஷ்யாவின் இராணுவ அதிகாரி அலெக்ஸி லியோனோவ் கூறுகையில்-,

'இந்த ஏவுகணைத் தயாரிப்பின் மூலம் ரஷ்யா ஜனாதிபதி புடினின் எதிரிகள் அவரைக் கண்டு பயப்படுவார்கள்.

அமெரிக்க இராணுவத்தை எளிதாக இந்த ஏவுகணை வெற்றிபெற்று விடும். இந்த ஏவுகணையில் 10 - 15 வரையிலான ஆயுதங்களின் பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாகங்களும் 750 கிலோ தொன் கொண்ட பிரம்மாண்ட எடையில் செய்யப்பட்டுள்ளன.- என்றார். (எ)

# ட்ரம்பின் முதலாவது வெளிநாட்டுப் பயணம்



அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவரின் முதல் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயண அட்டவணை வெளியாகியுள்ளது.

அமெரிக்க வெள்ளை மாளிகை அறிக்கையின் பிரகாரம் ட்ரம்ப் தனது முதலாவது விஜயத்தை இஸ்ரேல், வத்திக்கான் மற்றும் சவூதி அரேபியா உள்ளிட்ட நாடுகளுக்கு மேற்கொள்ளவுள்ளார்.

மேலும் இந்த விஜயத்தை நிறைவு செய்த நிலையில், இம்மாதம் இடம்பெறவுள்ள ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இத்தாலியின் சிசிலி நகருக்குச் செல்லவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ட்ரம்பைச் சந்தித்திருந்த நிலையில், நேற்று முன்தினம் பாலஸ்தீன ஜனாதிபதி மொஹமட் அப்பாஸுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளதோடு, தனது முதலாவது விஜயத்தை இஸ்ரேலுக்கு மேற்கொள்ளவுள்ளார்.

இந் நிலையில் வத்திகான் மற்றும் சவூதி செல்லும் ட்ரம்ப், போப் பிரான்சிஸ் மற்றும் சவூதி மன்னர் ஆகியோரை முதல் முறையாகச் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது ஐ.எஸ். தீவிரவாதம் மற்றும் உலக அமைதிக்கான செயற்பாடுகள் தொடர்பிலான பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் என்று வெள்ளை மாளிகை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## அரச படையினர் நடத்திய தாக்குதலில் அமைச்சர் உயிரிழப்பு

சோமாலியாவில் அரச படையினர் நடத்திய தாக்குதலில் அந்தநாட்டு அமைச்சர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

31 வயதான அபாஸ் அப்துல்லாஹி ஷேக் என்ற அமைச்சரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். தீவிர வாதி என்ற சந்தேகத்தின் பேரில் அரச படையினர் தவறுதலாக இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் மொகடிஸூவில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகாமையில் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். சிறுவயது புகலிடக்கோரிக்கையாளரான அபாஸ் அப்துல் லாஹி ஷேக் கடந்த ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், இந்த ஆண்டு அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## ஒபாமாவின் மருத்துவத் திட்டம் ரத்து



### ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன், மே 06

முன்னாள் ஜனாதிபதி ஒபாமா அறிமுகப்படுத்திய 'ஒபாமாகெயார்' மருத்துவத் திட்டம் மரணித்துவிட்டது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


'ஒபாமாகெயார்' மருத்துவத் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு குடியரசுக் கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட புதிய சுகாதார பராமரிப்புச்சட்டமூலம் அமெரிக்ககாங்கிரஸின் கீழ் சபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்தே ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒபாமாகெயாரில் காணப்பட்ட சில விதிமுறைகளை ரத்துச் செய்து அதற்கு மாற்றாக புதிய விதிமுறைகளை உள்ளடக்கியதாக குடியரசுக் கட்சியால் புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

அந்தச் சட்டமூலம் நேற்று முன்தினம் அமெரிக்க காங்கிரஸின் அனுமதிக்காக கீழ் சபையில் முன்வைக்கப்பட்டது. அதன் போது 217 பேர் சாதகமாகவும் 213 பேர் எதிராக வும் வாக்களித்திருந்தனர். இந்த நிலையில், குறுகிய வித்தியாசத்தில் குடியரசுக் கட்சியின் புதிய சட்டமூலம் வெற்றி பெற்றுள்ளது. (எ)

# சம்பியன்ஸ் கிண்ண போட்டியில் இந்தியா பங்குபற்றவேண்டும்!





## சச்சின், ராவிட் உட்பட 12 வீரர்கள் கோரிக்கை!

டில்லி, மே 06

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா விளையாடவேண்டும் என்று ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர் உட்பட 12 வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு வென்றெடுத்த சம்பியன் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொள்ள இந்தியா முன்வரவேண்டும் என 12 வீரர்களும் ஏகமனதாக கூறியுள்ளனர் என்று 'கிரிக்இன்போ' இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர், சஹீர்கான், குண்டப்பா விஸ்வநாத், சந்தீப் பட்டீல், சஞ்சே மஞ்ரேக்கர், ஆகாஷ் சொப்ரா, வெங்கடேஷ் பிரசாத், சபா கரிம், முரளி கார்த்திக், தீப் தாஸ்குப்தா ஆகியோரே தமது ஏகமனதான கருத்தை வெளியிட்டுள்ளனர்.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கான அணிகளை அறிவிக்கும் காலக்கெடு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதியுடன் இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவிக்கத் தவறியது.

இதன்காரணமாக சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் இந்தியா பங்குபற்றுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எவ்வாறாயினும் செயற்பாட்டு நடவடிக்கைகளே குழாம் அறிவிக்கப்படாமைக்குக் காரணம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

ஆளுமை, நிதி பங்கீடு ஆகியவை தொடர்பான புதிய யாப்பு விதிகளை சர்வதேச கிரிக்கெட் பேரவை நிறைவேற்றியதை அடுத்து முப்பெரும் சக்தியின் ஆதிக்கம் ஒடுக்கப்பட்டது.

முப்பெரும் சக்தி முறைமைக்கு அமைய இந்தியாவுக்கு கிடைக்கவேண்டியிருந்த 570 மில்லியன் டொலர்கள் 293 மில்லியன் டொலர்களாகக் குறைக்கப்பட்டுள்ளன.

எனினும், மேலும் 100 மில்லியன் டொலர்ளை இந்தியாவுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா பங்குபற்றுவது குறித்த தீர்மானம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விசேட கூட்டம் நாளை நடைபெறும்போது எடுக்கப்படவுள்ளது.

இது இவ்வாறிருக்க, இந்தியாவுக்கும் ஐ.சி.சிக்கும் இடையிலான அங்கத்தவர்கள் பங்காண்மை உடன்படிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நீக்கிக்கொண்டால் பல போட்டிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அதாவது, சம்பியன்ஸ் கிண்ணம் 2017 ஆம் ஆண்டு, 2021 ஆம் ஆண்டு, மகளிர் உலகக் கிண்ணம் 2017 ஆம் ஆண்டு, 2021 ஆம் ஆண்டு, மகளிர் உலக இருபதுக்கு 20 -2018 ஆம் ஆண்டு, 2020 ஆம் ஆண்டு, 2022 ஆம் ஆண்டு, ஆடவர் உலக இருபதுக்கு- 20 2020 ஆம் ஆண்டு, 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணம் 2018 ஆம் ஆண்டு, 2020 ஆம் ஆண்டு, 2022 ஆம் ஆண்டு, ஆடவர் உலகக் கிண்ணம் 2019 ஆம் ஆண்டு, 2023 ஆம் ஆண்டு, ஐ.சி.சி. டெஸ்ட் வல்லவர் போட்டி 2021 ஆம் ஆண்டு ஆகிய போட்டிகளை இந்தியா இழக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊக்கமருந்து பாவனையில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டனர் மேலும் 3 ரஷ்யர்கள்!




யூலியா சேர்மொஷான்ஸ்கயா




அனா ஓமரோவா




சொஸ்லான் சிரிகோவ்

மொஸ்கோ, மே 06

ரஷ்யாவைச் சேர்ந்த மேலும் மூன்று விளையாட்டு வீர, வீராங்கனைகள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனையில் ஈடுபட்டோம் என்று ஒப்புக்கொண்டுள்ளனர் என ரஷ்ய மெய்வல்லுநர் சங்கத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

இதில் ஓட்ட வீராங்கனை யூலியா சேர்மொஷான்ஸ்கயாவும் அடங்குகின்றார். இவரிடமிருந்து ஏற்கனவே ஒலிம்பிக் பதக்கம் மீளப் பறிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனையில் ஈடுபட்டமையை இந்த மூவரும் ஒப்புக்கொண்டமையை அடுத்து ரஷ்யா மீதான தடை நீக்கப்படலாம் என ரஷ்ய மெய்வல்லுநர் சம்மேளனத்தின் ஊக்கமருந்துப் பாவனைக்கு எதிரான பிரிவின் இணைப்பாளர் யெலெனா இகொனிக்கொவா தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் பெருமளவில் ஊக்கமருந்து பாவனை இருக்கிறது என்றும் அரச ஆதரவில் இவை இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவித்து ரஷ்யாவுக்கு 2015 ஆம் ஆண்டு சர்வதேச போட்டித் தடை விதிக்கப்பட்டது.

இதன் காரணமாக ரியோ 2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிலும் ரஷ்யா பங்குபற்றவில்லை.

ஊக்கமருந்துப் பாவனையில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட மூவரில் பெய்ஜிங் 2008 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் 4 தர 100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற ரஷ்ய மகளிர் அணியில் இடம்பெற்ற யூலியா சேர்மொஷான்ஸ்கயாவும் அடங்குகின்றார்.

தொடர் ஓட்டத்தில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களின் தங்கப் பதக்கம் கடந்த வருடம் மீளப்பெறப்பட்டிருந்தது.

ஊக்க மருந்துப் பாவனையில் ஈடுபட்டனர் என ஒப்புக்கொண்ட மற்றைய இருவர் குண்டு எறிதல் வீராங்கனை அனா ஓமரோவா, வீரர் சொஸ்லான் சிரிகோவ் ஆகியோராவர்.

## ஆசிய கரபந்தாட்டப் போட்டி:



# இலங்கை அணிக்கு முதலாவது வெற்றி!

அர்தாப், மே 06

ஈரானின் அர்தாபில், ரீசா ஸாதே உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 23 வயதுக்குட்பட்டவர்களுக்கான இரண்டாவது ஆசிய கரபந்தாட்டப் போட்டிகளில் இலங்கை அணி தனது முதலாவது வெற்றியை நேற்றுமுன்தினம் பதிவு செய்துள்ளது.

சம்பியன் பட்டத்திற்கான தகுதிகாண் சுற்றில் விளையாடும் வாய்ப்பை இழந்த இலங்கை நிரல்படுத்தலுக்கான சுற்றில் விளையாடி வருகின்றது.

இதன் பிரகாரம் 11 நாடுகள் பங்குபற்றும் இச் சுற்றுப் போட்டியில் 9ஆம், 10ஆம், 11ஆம் இடங்களைத் தீர்மானிக்கும் நிரல்படுத்தல் சுற்றில் உஸ்பெகிஸ்தானை நேற்று முன்தினம் இலங்கை எதிர்த்தாடி வெற்றிகொண்டது.

ஐந்து செட்கள் வரை நீடித்த இந்த பரபரப்பான போட்டியில் முதல் இரண்டு செட்களைக் கோட்டைவிட்ட இலங்கை, அடுத்த மூன்று செட்களிலும் டியூஸ் முறையில் வெற்றிபெற்றது.

முதல் இரண்டு செட்களில் முறையே 20 - 25, 16 - 25 எனத் தோல்வியடைந்த இலங்கை அணியினர், அடுத்து மூன்று செட்களிலும் வீறுகொண்டெழுந்து விளையாடி அபார வெற்றியை ஈட்டினர்.

மூன்றாவது செட்டில் 26 - 24 என வெற்றிகொண்ட இலங்கை, நான்காவது செட்டில் இன்னும் அதிகமான சவாலை எதிர்கொண்டு 28 - 26 என வெற்றிபெற்றது.

தீர்மானமிக்க ஐந்தாவது செட்டின் ஆரம்பத்தில் 8-4 என முன்னிலையில் இருந்த இலங்கை அணி அதன் பின்னர் மீண்டும் சவாலை எதிர்கொண்டது.

இறுதியில் 16 - 14 என வெற்றிபெற்று போட்டியை 3 - 2 என்ற ஆட்டக் கணக்கில் தனதாக்கிக்கொண்டது.

# இமாலய இலக்கை விரட்டி டில்லி டேர்டேவில்ஸ் வெற்றி!




புதுடில்லி, மே 06

10 ஆவது ஐ.பி.எல். தொடரின் 42 ஆவது லீக் போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி, குஜராத் லயன்ஸ் அணிக்கு எதிராக 7 விக்கெட்டுக்களினால் அசத்தல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடக் குஜராத் அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய ஸ்மித்(9 ஓட்டங்கள்), மெக்கலம் (1ஓட்டம்) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

குஜராத் அணி 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. பின்னர் ரெய்னாவும், தினேஷ் கார்த்திக்கும் ஜோடி சேர்ந்தனர்.

ரெய்னா தொடக்கம் முதலே அதிரடியாக ஆடினார். பவுண்டரிகளும், சிக்ஸர்களுமாக விளாசினார். மறுபக்கம் முதலில் நிதானமாக விளையாடிய தினேஷ் கார்த்திக் பின்னர் அதிரடி காட்டினார். இதனால் குஜராத் அணியின் ஓட்ட வேகம் கிடுகிடுவென உயர்ந்தது.

குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 208 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கடைசி 2 பந்துகளில் சிக்ஸர் விளாசிய ஜடேஜா 7 பந்துகளில் 18 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டில்லி அணியில் ரபாடா, கம்மின்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை எடுத்தனர்.

இதனையடுத்து 209 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி அணி களமிறங்கியது. கடின இலக்கை துரத்திய டில்லி அணி நிதானம் கலந்த அதிரடியுடன் துடுப்பெடுத்தாடியது. அவ்வணியின் ஆரம்ப வீரரான சம்சன் 31 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இவருடன் களமிறங்கிய கே.கே. நாயர் 12 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஆர்.ஆர். பேண்ட் அதிரடியாக விளையாடி 43 பந்துகளில் 97 ஓட்டங்களைக் குவித்தார்.

அதனைத் தொடர்ந்து அவ்வணியின் அன்டர்சன் 18 ஓட்டங்களுடனும், எஸ்.எஸ். ஐயர் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இதன் காரணமாக டில்லி அணி 17.3 ஓவர்களில் 214 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதேவேளை, டில்லி டேர்டெவில்ஸ் அணிக்கு எதிரான லீக் போட்டியில் மோசமான பந்துவீச்சால் தோல்வி அடைந்தோம் என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

208 ஓட்டங்கள் என்பது நல்ல 'ஸ்கோர்' தான். பந்து வீச்சு நன்றாக அமையாததால் தோல்வி அடைந்தோம். பழைய பந்தில் வீசக்கூடிய அனுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர்கள் இல்லை. ரிஷப்பான்ட் அதிரடியாக விளையாடி ஆட்டத்தை மாற்றிவிட்டார். அவர் மிகவும் சிறப்பாக விளையாடினார். அவரது நாளாக இந்த ஆட்டம் அமைந்தது.- என்று அவர் தெரிவித்துள்ளார்.

டில்லி அணி பெற்ற 4 ஆவது வெற்றி இதுவாகும். இந்த வெற்றி குறித்து அந்த அணியின் தற்காலிக தலைவர் கருண்நாயர் தெரிவித்தவை வருமாறு:-

எங்கள் அணி வீரர்களின் ஆட்டம் நம்ப முடியாத வகையில் சிறப்பாக இருந்தது. சாம்சனும், ரிஷப்பான்டும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இது மாதிரியான ஜோடியின் ஆட்டத்தை நான் பார்த்தது இல்லை. இருவரும் பயப்படாமல் இயல்பான ஆட்டத்தை ஆடினர்.- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா உடன்படிக்கையை நிறைவேற்றத் தவறிவிட்டது!

*பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குற்றச்சாட்டு*

கராச்சி, மே 06

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 2013 ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நடைபெறவுள்ள போட்டி அட்டவணை தொடர்பாக 2014 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிறைவேற்றத் தவறிவிட்டது என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இதனைக் குறிப்பிட்டு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு பிணக்கு தொடர்பான அறிக்கை ஒன்றை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுப்பிவைத்துள்ளது.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கிரிக்கெட் விஜயம் செய்வதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இணங்க மறுத்ததால் தமக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

எவ்வளவு தொகை நஷ்டம் ஏற்பட்டது என்பதை குறிப்பிடாத பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இந்தியாவுக்கு எதிரான இரண்டு தொடர்களை முன்னிட்டு ஒளிபரப்பு உரிமைக்காக தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுடன் 8 கோடி டொலர்கள் உடன்படிக்கை செய்யப்பட்டதாகத் தெரிவித்தது.

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் சட்ட நடவடிக்கை எடுக்க எண்ணியது. ஆனால் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் குழுவின் கட்டளைகளுக்கு அமைய ஐ.சி.சி. உறுப்பு நாடொன்று, 5 ஆம் இலக்க சரத்தைப் பின்பற்றுவது அவசியமாகும். இந்தச் சரத்தில் நம்பிக்கையுடனான கலந்துரையாடல்கள் நடைபெறுவது அவசியம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மூன்று முறைகள் முயற்சிக்கவேண்டும் எனவும் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைக் கருத்திற் கொண்டே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு பிணக்குத் தொடர்பான அறிக்கையை பாகிஸ்தான் கிரிகெட் சபை அனுப்பிவைத்துள்ளது.

இந்த சரத்திற்கு அமைய பாகிஸ்தானின் பிணக்கு தொடர்பான அறிக்கைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏழு நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும்.

இந்தியா சாதகமாக பதிலளிக்கும் பட்சத்தில் இரண்டு தரப்பினரதும் அதிகாரிகளுக்கு இடையில் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு பிணக்குக்கு தீர்வு காண முயற்சிக்கப்படும்.

இதற்குத் தீர்வு காணத் தவறும் பட்சத்தில் இந்த விடயம் ஐ.சி.சியின் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் அக்குழு, விசாரணைகளை நடத்தவென ஒரு பிரத்தியேகக் குழுவை நியமிக்கும். இதேவேளை, எதிர்கால கிரிக்கெட் விஜயங்கள் தொடர்பான திட்டத்திற்கு அமைய 2018 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு விஜயம் செய்யப்போவதில்லை என்பதை பாகிஸ்தான் உறுதி செய்துள்ளது. மேலும், இருதரப்புக் கிரிக்கெட் தொடர்களுக்கு முதலாவது வரவேற்பு நாடாக பாகிஸ்தானே அமைய வேண்டும் எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி!

பிரிட்ஜ் டவுன், மே 06

பிரிட்ஜ்டவுனில் இடம்பெற்று வரும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் பிரிட்ஜ்டவுனில் நடைபெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் 312 ஓட்டங்களும், பாகிஸ்தான் 393 ஓட்டங்களும் எடுத்தன. யாசிர்ஷாவின் அபார பந்துவீச்சால் மேற்கிந்தியத் தீவுகள் 2 ஆவது இன்னிங்ஸில் திணறியது. 4 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் அந்த அணி 268 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. ஹோப் 90 ஓட்டங்கள் எடுத்தார். யாசிர்ஷா 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



இந்நிலையில், 187 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 81 ஓட்டங்களுக்குக் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் ஷனோன் கேப்ரியல் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 11 ஓட்டங்களை வழங்கினார். இவருடன் தலைவர் ஜேசன் ஹோல்டர் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றியைத் தொடர்ந்து இரு அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடர் சமமாகியுள்ள நிலையில், இறுதிப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்குக்கட்டளையிட்ட அரசியல் அதிகாரி யார் என்ற பதிலை அறிவிக்க வேண்டுமானால், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறையில் அடைக்குமாறு கட்டளையிட்ட அரசியல் தலைவர்யார்என்பதைக்கூட்டு எதிரணி (மஹிந்த அணி) அறிவிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி – பதில் நேரத்தின்போது ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின் மஹிந்த ஆதரவு அணி உறுப்பினரான பத்ம உதயசாந்த எம்.பி. சட்டம், ஒழுங்கு அமைச்சரிடம் எழுப்பியிருந்த கேள்விகளால் அவையில் நேற்று சர்ச்சை ஏற்பட்டது.

அவரின் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் –

1983காலப்பகுதியில்மட்டக்களப்பில்6பொலிஸ்நிலையங்களும் அம்பாறையில் 9 பொலிஸ் நிலையங்களும் இருந்தன. அக்காலப்பகுதியில் எத்தனைபொலிஸ்அதிகாரிகள் அங்கு பணிபுரிந்தார்கள் என்ற தகவல்கள் எம்மிடம் இல்லை. யுத்தம் காரணமாக இவ்விரு மாவட்டங்களிலும் 11 பொலிஸ் நிலையங்கள்அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

'' பயங்கரவாதிகளின்தாக்குதலினால் அம்பாறை மாவட்டத்தில்361பொலிஸார்மரணித்துள்ளனர். மட்டக்களப்பில் ரணவிரு நலனோம்பல் பிரிவினால் பேணி வரப்படுகின்ற ஆவணங்களுக்கு அமைய 1990.06.11ஆம் திகதியின் பின்னர் 459 பொலிஸார் மரணித்துள்ளனர்.

இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஏற்பட்ட சேத விவரம் சம்பந்தமான முழுமையான அறிக்கையொன்றை வன்செயல் மற்றும் சுனாமியின் காரணமாக வழங்க முடியாதுள்ளது. இவர்கள் கோருகின்ற முழுமையான அறிக்கையைத் தயார் செய்ய அவர்களுக்கே முடியாதுபோனது – என்றார்.

1990 களில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சேவையாற்றிய பொலிஸ் அதிகாரிகளுக்கு உயர்மட்டத்தில் இருந்து வந்த கட்டளைகளினால் விடுதலைப் புலிகளுக்குக் கட்டுப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால்பொலிஸ்அதிகாரிகள் பலர்கொலை செய்யப்பட்டனர். அல்லது மிகுந்த சிரமங்களுக்கும்உள்ளாகினர்.இவ்வாறு கொலைசெய்வதற்குக்காரணமாகஇருந்தகுறித்தகட்டளைஅதிகாரியார்என்பதைஅடையாளம் கண்டுள் ளீர்களா? – என்று பத்மஉதயசாந்தஎம்.பி.கேள்வி எழுப்பியதைஅடுத்துசபையில் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

கொலைகளுக்குக்கட்டளையிட்டவர் கருணா அம்மானே என ஆளுந்தரப்பு எம்.பிக்கள் கோஷமிட்டனர்.

இந்நிலையில் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க, "இந்தக் கேள்விக்கான பதிலை கடந்த ஆட்சியில் உங்களுடன் அமைச்சுப் பதவிகளைப் பெற்று ஒன்றாக இருந்த கருணா அம்மானிடம் கேட்டிருக்க வேண்டும். அவரே அனைத்துக்கும் பொறுப்பானவர்." – என்றார்.

புலிகளின்தலைவரைநான் கேட்கவில்லை. விடுதலைப் புலிகளுக்குக் கீழ்ப்படியுமாறு பொலிஸாருக்குக்கட்டளையிட்ட அரசியல்தலைவர் யார் என்றே கேட்டேன். அவ்வாறு எவரும் அடையாளம் காணப்படவில்லை என்றால் எதிர்காலத்தில் இது சம்பந்தமாக விசாரணை நடத்தி அதுயார் என்று சபைக்கு அறிவிக்க முடியுமா? – என்றார் பத்ம உதயசாந்த எம்.பி.

"சரத்பொன்சேகாவைசிறையில் அடைக்கக் கட்டளை பிறப்பித்தவர் யார் என்று தங்களால் கூறமுடியுமாயின் இந்தவிடயம் தொடர்பில் விசாரணை நடத்தி விடுதலைப்புலிகளுக்கு கீழ்ப்படியுமாறு கட்டளையிட்ட அரசியல் தலைவர் யார் என்பதை அறிவிக்கின்றேன்'' – என்று அமைச்சர் சாகல ரத்நாயக்கதெரிவித்தமை அடுத்து மஹிந்த அணி உறுப்பினர்கள் கூச்சலிட்டு சபையில் குழப்பம் எற்படுத்த முற்பட்டனர்.

இதனையடுத்து எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, மஹிந்த ராஜபக்ஷ 10 வருடங்கள் ஆட்சி செய்தார். பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தார். இது தொடர்பான தகவலை அப்போது திரட்டியிருக்க முடியும். சில்லறைப் பிரச்சினைகளை இப்போது இங்கு வந்து கேட்காதீர்கள்.– என்றார்.

இதையடுத்து தற்போது ஆட்சியில் உள்ளவர்களே இந்தக் கட்டளையைப் பிறப்பித்தவர்கள். அதனாலேயே கேள்விக்குப் பதிலளிக்காது நழுவுகின்றனர் – என்று தெரிவித்தார் பத்ம உதயசாந்த எம்.பி. (உ)

## மயிலிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு தயாராகி வருகின்றது என்றும் –

இப்பகுதி விடுவிக்கப்பட்டால் ஐந்நூறுக்கும் அதிகமான குடும்பங்கள் தமது பூர்வீக நிலத்துக்குத் திரும்பக் கூடியதாக இருக்கும் என்றும் –

அந்தவட்டாரங்கள்'காலைக் கதிருக்கு'த் தெரிவித்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 19, 20, 21ஆம் திகதியில் வடக்கிற்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொள்ளவிருக்கின்றார் எனத் தெரிகின்றது. மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்குபற்றுவார்.

மயிலிட்டித் துறைமுகத்தை மக்களிடம் விடுவிக்கும் நிகழ்விலும் அவர்பங்குபற்றக்கூடும் என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிதாகப் பதவியேற்றுள்ள யாழ். படைகளின் தளபதி எதிர்வரும்செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் மற்றும் பிரதேச செயலர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுகின்றார்.

அவ்வேளை மயிலிட்டி விடுவிப்புத்தொடர்பான விடயங்கள் இறுதி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## மேஜர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமத்தப்பட்டு அவருக்கு எதிராக விசாரணை நடக்கின்றது.

இத்தகவலைவெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவினால் ஜெனரல் கமால் குணரட்ண பிரேஸிலுக்கான தூதுவராக அனுப்பப்பட்டார்.

அங்கு அவருக்கும் அவரது மனைவிக்கும் உடைகள் தோய்த்துக் கொடுக்கும் தூதரக ஊழியரே கமால் குணரட்ணவினால் தலையில் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என அவரின் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குணரட்ணவின் மோசமான நடத்தைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கைக்கு அந்த ஊழியர் இடமாற்றம் கோரியிருந்தார் என்றும் கூறப்பட்டது. (உ)

## காலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளனர். இதனால் அரச ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவுசேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. நோயாளர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

வேலைநிறுத்தப் போராட்டத்தை இயக்கும் டொக்டர் அனுருந்த பாதனிய இன்று (நேற்று) மாலை தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சையளிப்பதற்காக நோயாளியொருவரிடம் முற்பணம் பெற்றுள்ளார். எனவே, அரச சம்பளம் பெறும் ஒருவர் மக்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்திவிட்டு தனியார்துறையில்பணியாற்றுகின்றமையை ஏற்கமுடியாது என்று சுட்டிக்காட்டினார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அமைச்சர் ஒருவருக்கு தனது அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் அறிவிப்பு விடுக்கமுடியும். தயாசிறி முன்வைத்த கருத்தை நான் விமர்சிக்கவில்லை. ஆனால், அந்தக் கருத்தை பிரதமர் அல்லது சுகாதார அமைச்சரே முன்வைத்திருக்கவேண்டும். மாறாக இப்படி செய்வது முறையல்ல என்றார்.

இதனால், அமைச்சர் தயாசிறி கடும் சீற்றமடைந்தார். இதையடுத்து அநுரவுக்கும், அவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து இவ்விவகாரம் பற்றி சபை முதல்வர் விளக்கமளித்தார்.

வைத்தியர்களால் முழு நாட்டிலும் வேலைநிறுத்தம் செய்யும்போது டொக்டர் பாதனிய தனியார் வைத்திசாலையில் சிகிச்சையளிப்பதற்காக நோயாளர்களைப் பதிவு செய்துள்ளார். வேலைநிறுத்தம் காலையில், மாலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை வழங்குகின்றார். இந்தப்போராட்டம்முற்றிலும்தோல்வியடைந்துள்ளது. – என்றார்.

இதைமறுத்துஉரையாற்றிய விமல் வீரவன்ச எம்.பி., அரச வைத்தியர்கள் சங்கத்தின் பிரதானி தனியார்துறையில்பணி புரிகின்றார் எனச் சேறு பூசாதீர்கள். பொய்யான ஆவணங்களைக் காட்டாது, முடியுமானால் அதனை வீடியோ செய்து காட்சிப்படுத்துங்கள். வைத்தியர்களுக்குச் சேறுபூசி இந்தப் பிரச்சினைக்குத்தீர்வு காணமுற்படாது வைத்தியர் சங்கத்துடன் பேச்சு நடத்துங்கள் என்றார்.

மீண்டும் குறுக்கிட்ட அமைச்சர்தயாசிறிஜயசேகர, நான் ஒருபோதும்அவதூறுகளைப்பரப்பி மற்றவர்களுக்குச் சேறுபூசுபவன் அல்லன். நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவே தனியார் வைத்தியசாலையில் குறித்த வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதற்கு முற்பதிவு செய்துள்ளார். அதற்குரிய பற்றுச்சீட்டே இது என்றார்.

"தயாசிறி எந்தச் சட்டத்தின் கீழ் இந்தக் கருத்தை சபையில் முன்வைத்தார் என்பதை சபாநாயகர்சபைக்குவிளக்கவேண்டும். அரசவைத்தியர்கள்வேலைநிறுத்தத்தில்ஈடுபட்டுக்கொண்டு தனியார் துறையில் பணியாற்றுகின்றனர்என்றுகூறுகின்றார். அதேநிலைதான் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சைட்டத்திலும்விரிவுரையாற்றச்செல்கின்றனர். அது பிழை என்றால் இது சரியா?" எனக் கேள்வி எழுப்பினார்அநுரகுமாரதிஸாநாயக்க.

இதேவேளை, தான் வைத்தியர் பாதனியிடம் சிகிச்சை பெறுவதற்கு தனியார் வைத்திய சாலையில் முற்பதிவு செய்த விவரத்தைரஞ்சன்ராமநாயக்க எம்.பி. தனது முகநூலில் பதிவு செய்துள்ளார். (உ)

## வடலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்தில் சப் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றும் ஆனந்தராசா துரைராசசிங்கம் (வயது–34) என்பவரே பலியானார். இளவாலையைச் சேர்ந்த இவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்து நின்றபோதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

சுழிபுரம் பனிப்புலத்தைச் சேர்ந்த இளைஞர்களான ஈஸ்வரன் ஜஸ்டின் என்பவரின் பிறந்த தினம் நேற்று எனக் கூறப்படுகின்றது. பிறந்த தினத்தைக் கொண்டாடிவிட்டு அவரும் அவரது நண்பரான திருநாவுக்கரசுகரன்என்பவரும் மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் சித்தன்கேணியில் இருந்துபண்டத்தரிப்புநோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது வடலியடைப்புஅரசடிவளைவில் இவர்களின் மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, பண்டத்தரிப்பில்இருந்துசித்தன் கேணி நோக்கி வந்த பொலிஸாரின் மோட்டார்சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச்சம்பவத்தில்பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரும் அவருடன் பயணித்துக் கொண்டிருந்த இளவாலையைச் சேர்ந்த டுகானந்தன் குகதீசன் (வயது – 18) என்பவரும் இவர்களின் மோட்டார் சைக்கிளுடன் மோதிய இளைஞர்களும் படுகாயமடைந்தனர். இரு மோட்டார் சைக்கிள்களும் கடுமையாகச் சேதமடைந்தன.

காயமடைந்த நால்வரும் உடனடியாகசங்கானைபிரதேச வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டனர். வழியில் சப் இன்ஸ்பெக்டர் உயிரிழந்தார். மற்றைய மூவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் பரிசோதனைகளின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த விபத்து தொடர்பாக இளவாலைப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-40 - 54)

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்க வேண்டும் என கூட்டு எதிரணி குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த – புனர்வாழ்வுப் பயிற்சிகளைப் பெறாத – பலர் சாதாரண மக்கள் சமூகத்தில் இருக்கும் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியின் உள்ளூராட்சி ஒன்றியத்தின் பிரதான அமைப்பாளர் குணசிறி ஜயநாத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மஹிந்தராஜபக்ஷவின்பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த – முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான சிறப்பு பயிற்சிகளைப் பெற்ற – பாதுகாப்பு படையினர் தற்போது விலக்கிக்கொள்ளப்பட்டமையை வன்மையாககண்டிக்கின்றோம்.

உடனடியாக அவருக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்காது போனால் கடுமையாக முடிவுகளை நாம் எடுக்க நேரிடும். – எனவும் குணசிறி ஜயநாத் குறிப்பிட்டுள்ளார்.

## அனலைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றில் ஆங்கிலக் கல்வி போதிக்கும் இளம் ஆசிரியர் ஒருவர், 11ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருடன் தவறாகப் பழக முயன்றார் என்ற குற்றச்சாட்டை அடுத்து கடந்த செவ்வாயன்று அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

வெளியிடங்களில் இருந்து அனலைதீவுக்குச்சென்றுஅங்கு தங்கியிருந்து கல்வி கற்பிக்கும் சுமார்15ஆசிரியர்கள், தடி, பொல்லுகளுடன் வந்த குழுவினரால் அச்சுறுத்தப்பட்டனர்.

எனினும் பாடசாலை பெற்றோரும், மாணவர்களும் பாடசாலைகளில் ஆசிரியர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைத்து அவர்களுக்குக்காவலாகநின்று, அடுத்தநாள்ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் உதவியுடன் அனலைதீவிலிருந்து அவர்களை அனுப்பிவைத்தனர்.

சர்ச்சைக்குரிய ஆசிரியர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அனலைதீவிலிருந்து வெளியேறிய 14 ஆசிரியர்கள் தாங்கள் மீண்டும் அங்கு செல்வதற்கு அச்சப்படுகின்றனர் எனத் தெரிவித்து ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டத்துக்குச் சமுகமளித்தனர்.

இதனையடுத்து இந்தப் பிரச்சினைக்கு நேரடியாகச் சென்று தீர்வு காண்பதற்காக வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள், வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும், சம்பந்தப்பட்ட அனலைதீவு சதாசிவ ம.வியில் முன்னர் ஆசிரியராகக் கடமையாற்றியவருமான பா.கஜதீபன் ஆகியோர்மேற்படி14 ஆசிரியர்களையும் கூட்டிக் கொண்டு ஊர்காவற்றுறைபொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி மற்றும் சில பொலிஸாருடன் நேற்று அனலைதீவுக்கு நேரில் சென்றனர்.

மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், பிரதிக் கல்விப்பணிப்பாளர்த.தர்மலிங்கம், மேலதிகக் கல்விப் பணிப்பாளர் நந்தகுமார், தீவகவலயக்கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம், ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப் பணிப் பாளர் சத்தியசீலன் ஆகியோரேநேற்றுஅங்குசென்றனர்.

அங்கு பாடசாலைகளின் மணவர்கள், பெற்றோர், ஏனைய ஆசிரியர்களை அழைத்து நீண்ட கலந்துரையாடல் ஒன்றை அவர்கள் நடத்தினர்.

சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய ஆசிரியரின் விடயத்தில்சட்டம்தனதுகடமையைச்செய்யும் வகையில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் –

பாடசாலைகளில் தங்கு தடையின்றிகற்றல் – கற்பித்தல் நடவடிக்கை நடப்பதற்கு ஏற்ற விதத்தில் அனைவரினது பாதுகாப்புக்கும் கௌரவத்துக்கும் மதிப்புக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும் என்றும் –

கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அமைய சகல ஆசிரியர்களும் திங்கட்கிழமை தொடக்கம் வழமை போல அங்குள்ள மூன்று பாடசாலைகளுக்கும் சமுகம் தந்து கற்பித்தல் பணியில் ஈடுபடுவர் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## குற்றப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

12ஆம் திகதிக்கு முன்னர் சட்டமா அதிபரால்தாக்கல்செய்யப்படும் என அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் நேற்று யாழ். மேல் நீதிமன்றில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தெரிவித்தார்.

வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 9 சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நீடிக்கும் உத்தரவை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்று விடுத்தார். (உ)

# பேஸ்புக் நிறுவனத்துக்கு 3 ஆயிரம் புதிய பணியாளர்

## வன்முறைச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த

கொழும்பு, மே 06

'பேஸ்புக்' நிறுவனம் கொலை, விபத்து மற்றும் வன்முறை 'லைவ் வீடியோ'க்களை கட்டுப்படுத்த 3 ஆயிரம் புதிய பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

'பேஸ்புக்' நிறுவனத்தின் தலைமை இணை அதிகாரி மார்க் ஸக்கர்பெர்க் இது தொடர்பாக நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

உலகம் முழுவதும் 150 கோடிக்கும் அதிகமான பயனாளர்களைக் கொண்டுள்ள சமூக வலைதளமாக 'பேஸ்புக்' காணப்படுகின்றது.

கால மாற்றத்துக்கு ஏற்ப தேவையான 'அப்டேட்'களை பயனாளர்களுக்கு வழங்கி வருவதில் 'லைவ் வீடியோ' வசதியும் ஒன்றாகும்.

சமீபத்தில் தற்கொலை செய்வோர் சிலர் தங்களது தற்கொலைகளை 'லைவ்' ஆக ஒளிபரப்பி அதிர்ச்சிக்குள்ளாக்கினர்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை பரிசீலனை செய்த 'பேஸ்புக்'நிர்வாகம் மேற்கண்ட 'லைவ்' வீடியோக்கள், கொலை, விபத்து மற்றும் வன்முறை வீடியோக்களைக் கட்டுப்படுத்தக் கூடுதல் பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்காக 3 ஆயிரம் புதிய பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக இவ்வாறான வீடியோக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பயனாளிகளால் பதிவேற்றப்படும் வீடியோக்களில் சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையிலான வீடியோக்களை வலைதளத்தில் இருந்து நீக்கவும் 'பேஸ்புக்' நிறுவனம் முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் இது போன்ற வீடியோக்களைக் கட்டுப்படுத்தி, நீக்குவதற்கான முறையான தொழில்நுட்பத்தை விரைவில் உருவாக்கவுள்ளதாகவும் மார்க் ஸக்கர்பெர்க், முதலீட்டாளர்களுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மத்திய மாகாண சபை அமர்வு;

# கடைசி வரிசை ஆசனத்தை வழங்கக் கோருகிறார் பிரமித!

கொழும்பு, மே 06

பிரமித பண்டார தென்னக்கோன் தனக்கு மாகாண சபை அமர்வுகளின் போது கடைசி வரிசையில் ஆசனத்தை வழங்குமாறு கோரியுள்ளார்.

மத்திய மாகாண சபையின் தலைவரிடம் கடிதம் ஒன்றின் மூலம் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தம்புள்ளை மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்து அவரது தந்தையார் நீக்கப்பட்டமையை அடுத்து, பிரமித பண்டார தென்னக்கோன், மத்திய மாகாண சபையில் தான் வகித்து வந்த அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தார்.

இதனையடுத்து, திலிண பண்டார தென்னக்கோன் அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மத்திய மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரது கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்பது தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்

(ஐ)

# பிரதேச கலை கலாசாரங்களை வளர்க்க முகாமைத்துவக் குழு, உபகுழுக்கள் தெரிவு

## யாழ்.பிரதேச செயலகம் நடவடிக்கை

கொழும்பு,மே.05

யாழ்.பிரதேச செயலகத்தின் 'யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகாரசபையின்கீழ் முகாமைத்துவக் குழு, நிகழ்வுகளுக்கான உப குழுக்கள் என்பன மேற்படி சபையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பாரம்பரிய கலை கலாசாரங்களை வளர்க்கும் நோக்கிலும் அதற்காக சமூகவிழிப்புணர்வுச்செயற்பாடுகளை முன்னெடுக்கவும் சகல துறைகளுக்குமான உப குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் மேற்படி குழுக்களில் துறைசார்ந்தவர்கள் இணைந்து சமூக சேவையாற்ற முன்வருமாறும் யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுத் தலைவர் ஜோர்ஜ் ஜெஸ்ரின் தெரிவித்துள்ளார்.'

முகாமைத்துவக் குழு மற்றும் உப குழுத் தலைவர்களின் விவரம் வருமாறு:

முகாமைத்துவக் குழு: ஜோ. ஜெஸ்ரின், நா.சுந்தரராசா, செ.வசன்பேர்க்,கா.சுரேன், நா.ஐஸ்வர்யா.

வேட உடை ஒப்பனை: அன்றூ யூலியஸ்,

நாடகம்- அன்ரனி ரஜீவ் , இசை: த.சண் முகப்பிரியன், நாட்டுக் கூத்து: ஆ.மனுவேற்பிள்ளை, ஓவியம்/சிற்பம்: அன்ரன் ஜோசப், இலக்கியம்: செ.ஜோசப் பாலா, யோகக்கலை: ந.சிவனேஸ்வரராஜா, சித்த மருத்துவம்: இ.சற் குருநாதன், வில்லிசை: இராசையா ஸ்ரீதரன், கவிதை: நஸ்ரியா அஜித், கிராமியக்கலை: வ.தயாநிதி, பறை- அ.நிருஷன், தற்காப்புக்கலை : சி.விஜயராஜ், நடனம் - சு.குமுதினி, புகைப்படம்:அ.சுதாகரன், ஊடகம் - ந.கணேசமூர்த்தி, சினிமா/ திரைத்துறை ச.மேரிஷாலினி.

# மின் தடை அறிவிப்பு

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக -

யாழ்.பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை காலை 08 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை சீரணி, ஆலங்குளாய், சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, மதவடி, பெருமாள் கடவை, கந்தரோடை, ஆர்க் வீதி (உடுவில்), சுன்னாகம் பிரதேசம் ஒரு பகுதி, சுன்னாகம் ஐயனார் கோவிலடி, கல்லாரை, மல்லாகம், ஏழாலை மேற்கு, அளவெட்டி, பன்னாலை, தெல்லிப்பழை, சிறுவிளான், மல்லாகம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் பூட் சிற்றி, நாவற்குழி சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை திருநெல்வேலியில் ஒரு பகுதி,தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, ஆரியகுளம் சந்தி, அரசடி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி OLR பிரதேம், வெலிங்டன் சந்தி , கஸ்தூரியார் வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி ரயில்வேக் கடவையி லிருந்து தட்டார்தெரு சந்தி வரை-

கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியில் இருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்திவரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப் புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மாட்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை-

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கோண்டாவில் CTB டிப்போ பிரதேசம், குமரக்கோட்டம், பலாலி வீதி, வாமஸ் வீதி, கோண்டாவில் சந்தி, நாராயணன் வீதி, பொற்பதி வீதி, மகேந்திரன் கடையடி, கோண்டாவில் இருபாலை வீதி, இராஜவீதி சந்தி, கிருஸ்ணன் கோவிலடி, கலைவாணி, MILL வீதி, திருநெல்வேலி பிரதேசம், External Studies, திருநெல்வேலி கொமர்சியல் வங்கி, திருநெல்வேலி இலங்கை வங்கி, நொதேர்ண் பிறைவேற் வைத்தியசாலை, பலாலி டம்றோ, AVNOR (Pvt)L.td, புகையிரத நிலைய பிரதேசம், கிறீன் கிறாஸ் விடுதி, BCAS, ஞானம்ஸ் விடுதி, ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி, NSR கட்டடத் தொகுதி, HNB, யாழ். புகையிரத நிலையம், சிறீநதியா மாளிகை, Raja Talkics, தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, ஹரிகணன் அச்சகம் பிறைவேற் லிமிடெட், அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரா என்ரபிறைசஸ் பிறை வேற் லிமிடெட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி., யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ். மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் (துளசி மகால்), யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், றக்கா வீதி பிரிட்டிஷ் கவுன்ஸில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், US கொட்டல், பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் (இ.மி.ச) 51 ஆம் பிரிவு இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, இராஜேஸ்வரி மண்டபம், யாழ். பல்கலைக்கழக ஆண்கள் விடுதி ஆகிய இடங்களிலும்-

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அறிவித்தலின்படி நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ்.பிரதேசத்தில் பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, புதர்மடம், கோப்பாய் சந்தி, கோப்பாய் கைதடி வீதி, கோப்பாய் மானிப்பாய் வீதி, இருபாலை, நாவலடி, வசந்தபுரம், GPSவீதி, ஆசிரியர் கலாசாலை, கட்டைப்பிராய், வட்டக்குளம், கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ் நிலையம், பாற்பண்ணை, முடமாவடி, திருநெல்வேலி, சந்தை, சட்டநாதர் வீதி-

பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தையிலிருந்து நல்லூர்கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர்வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர்வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி ரயில்வேக் கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி-

நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி ரயில்வேக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, Cey- Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு, arlton Sports Network (CSN)நெடுந்தீவு பிரதேசம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட், நெடுந்தீவு தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து (A9 வீதி) நெளுக்குளம் ஊடாக ராஜேந்திர குளம் வரை, நெளுக் குளத்திலிருந்து பம்பைமடுவரை, ஒமேகாலைன், UNHCR குருமன்காடு, வவுனியா தொழிநுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை-

சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன், முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக்குளம், மணற்குளம்-

மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக்கட்டி, கூளாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசனசபை, சிலாவத்துறை, CECB முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## கூட்டு எதிரணியிலிருந்து விலகி இருக்க காஞ்சன விஜேசேகர எம்.பி. முடிவு!



கூட்டு எதிர்க்கட்சியில் இருந்து சில காலம் விலகியிருக்கத் தாம் முடிவு செய்திருக்கின்றார் என மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

காஞ்சன விஜேசேகர தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில்இதனைக்கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் இணையவோ அல்லது மைத்திரி அணியில் இணையும் நோக்கிலோ, தான் இந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது நிலைப்பாட்டை சரியாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இந்தத் தீர்மானத்தைத் தாம் எடுத்துள்ளார் எனவும், மாத்தறை மாவட்ட மக்களுக்குத் தொடர்ந்தும் தாம் சேவையாற்ற உள்ளார் எனவும் காஞ்சன விஜேசேகர தெரிவித்தள்ளார்.

காஞ்சன விஜேசேகர முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மஹிந்த விஜேசேகர மாத்தறையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)



## தமிழர் தாயகத்தில் காணாமற்போனோரை கண்டறியும் போராட்டங்கள் தொடர்கின்றன

முல்லைத்தீவு, மே 06

தமிழர் தாயகத்தில் காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறிந்து விடுதலை செய்ய வலியுறுத்தி அவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள், தீர்வின்றித் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

தாங்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், அதுதொடர்பாக அரசியல்வாதிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால்வவுனியாவில் நடத் தப்பட்டுவரும் போராட்டம் நேற்று 71 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

கையளிக்கப்பட்ட தமது உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரியும் இவர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தீர்வு கிடைக்கும் வரை இச் சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

### அரசியல்வாதிகளின் பாராமுகம் குறித்துக் கவலை



இதேவேளை, காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப் பட்டுவரும் போராட்டம் நேற்று 59 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

இங்கு போராட்டத்தில்ஈடுபட்டு வருபவர்களுக்கு பல்வேறு தரப்பினர் தமது ஆதரவுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் பல மக்களின்உயிர்த்தியாகங்களை நினைவு கூராமல் அங்கு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருவதுவேதனையளிக்கின்றது எனப்போராட்டத்தில்ஈடுபட்டுள்ளவர்கள் கவலை வெளியிட்டனர். (ம - 81,100)

## முல்லை. செயலக சாரதி விபத்தில் பலி!



முல்லைத்தீவு மாவட்ட செயலக வாகனம் புத்தளம் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளானதில் மாவட்ட செயலக புள்ளிவிவரப் பகுதிச் சாரதி உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை, ஐயன் கோவிலடியைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா ராஜராஜன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்த விபத்தில் செயலகப் பணியாளர் ஒருவரும் அவரது இரு பிள்ளைகளும் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த செயலக 'கெப்' வாகனம் லொறியுடன் மோதியே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.


விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-81)

## ஜி.எம்.ஓ.ஏ. தலைவருக்கு நீதிமன்று அழைப்பாணை

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின்(ஜி.எம்.ஓ.ஏ)தலைவர் அனுருத்தபாதெனியஎதிர்வரும் 22 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டும்என மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தியதாக அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை விசாரிக்கவே அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ம்)

## வவுனியா – அம்மிவைத்தானில் யானை அட்டகாசம்





வவுனியா – ஈச்சங்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட அம்மிவைத்தான் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த தனியானைமூன்று வீடுகளைச் சேதப்படுத்திய அதேசமயம், அங்கிருந்த தென்னை மற்றும் வாழைகளை நாசப்படுத்தியது.

மக்கள் யானையை விரட்டியடிக்க முற்பட்டபோது அவர்களைத் துரத்திய யானை அங்கிருந்த மூன்று வீடுகளைச் சேதப்படுத்தியுள்ளது.

வீடுகளில் இருந்தவர்கள் அருகிலுள்ள பற்றைகளுக்குள் ஓடி ஒளித்து உயிர் தப்பிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-100)

## விசேட போக்குவரத்து முறை நாடளாவிய ரீதியாக அமுல்

நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்து முறையை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தை அடுத்துவரும் சில தினங்களில்விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது இடது பக்கத்தால்பயணிக்காமை, வலதுபக்க சட்டத்தைமீறுதல், தொலைபேசியில் பேசிக் கொண்டு வாகனத்தை செலுத்துதல் போன்ற விடயங்கள் முக்கியமாக கண்காணிக்கப்படவுள்ளன. (ம்)





வலி.மேற்குப்பிரதேசசெயலாளர் அ.சோதிநாதன், வேலணைப்பிரதேசசெயலாளராக இடமாற்றப்பட்டமையை அடுத்து, அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேசசெயலாளருக்கு வேள்ட்விசன் நிறுவன அதிகாரிகள், கிராமசேவையாளர்கள் ஆகியோர் பாராட்டுப் பத்திரங்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம். (ம)